₹10

fmpb

# அறைகூவல்

Volume 55 | Issue 2 | February 2025


*“அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்.” 1 யோவான். 3:24*

# தேவ வார்த்தையில் நிலைத்திருப்பது




## தேவ வார்த்தையில் இன்னும் அதிகமாய்

# ஆரம்ப வரிகள்...



## அவர் வார்த்தையில் நிலைத்திருப்போம்

ஜார்ஜ் ஃபோர்மேன் என்ற குத்துச் சண்டை வீரர் **“கடவுள் என் மூலையில் (God in my corner)”** என்ற தனது புத்தகத்தில், 1974இல் ஆப்பிரிக்காவில் முகமது அலி என்பருக்கு எதிரே சண்டையிடச் செல்லும் முன் நண்பர் ஒருவர் அவரிடம் ஒரு பரிசுத்த வேதாக மத்தைக் கொடுத்து அதை நல்ல அதிர்ஷ்டத்திற்காக உன்னுடன் எடுத்து செல் என்று கூறினார். ஆனால் ஜார்ஜ் அந்த வேதாகமத்தை ஒரு மேய்ப்பனின் கையேடாகவே பாவித்திருந்தார். ஏனென்றால் அவர் அறிந்திருந்த ஒரே ஒரு வசனம் **கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்** என்பதே. அவர் எங்குச் சென்றாலும், தனக்கு அதிர்ஷ்டம் தரும் என்று நம்பி எல்லா பொருட்களுடன் அந்த வேதாகமத்தையும் தன்னுடன் எடுத்துச் செல்வதாக எழுதி யிருந்தார். அதன்பின் இக்கட்டான சூழ்நிலையில் இயேசுவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு போதகராக ஊழியம் செய்து வந்தார். இன்று நாமும் வேதாகமத்தை நம் வாகனத்தில் எடுத்துச் சென்றால் பாதுகாப்பு என்றும், தொழில் செய்யும் இடத்தில் வைத்தி ருந்தால் லாபம் பெருகும் என்றும், நம்மோடு எங்கு எடுத்துச் சென்றாலும் நாம் செல்லும் காரியம் வாய்க்கும் என்றும் அதிர்ஷ்டப் பொருளாக கருதுகிறோமா? அது நமது வாழ்விலும் ஒரு மேய்ப்பனின் கையேடாக இருக்கிறதா? அல்லது எதிரியை வீழ்த்த தேவைப்படும் பட்டயமாக உள்ளதா என்று சிந்திப்போம். நமது இயக்கத்திற்கென்று ஒன்பது நெறிமுறைகள் உள்ளன. அதில் முதலாவது **தேவ வார்த்தையில் நிலைத்திருப்பது** என்பதாகும். வேதத்தை நேசித்து, வாசித்து, தியானித்து, மனனம் செய்து அதில் உள்ளவைகளை நம்வாழ்வில் கடைப்பிடித்தால் மட்டுமே நாம் அவரில் நிலைத்திருக்க முடியும், அவரும் நம்மில் நிலைத்திருப்பார் (1யோ.3:24). பல கள்ள போதகங்கள் பரவி நம்மை குழப்பி, திசை திருப்பும் இக்காலகட்டத்தில், நாம் அவர் சமூகத்தில் அமர்ந்து ஆவியானவரின் துணையோடு பெரோயா விசுவாசிகளைப்போல் (அப். 17:11) வேதத்தை ஆராய்ந்து கற்காத பட்சத்தில் நாம் வஞ்சிக்கப்படுவோம். அவர் வார்த்தையில் நிலைத்திருப்போமானால் மெய்யாகவே இயேசுவின் சீடராக இருப்போம். மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சிப்பெற்று பாவத்திற்கு விலகி கனிதரும் வாழ்வை வாழ முடியும்.

எக்காலத்திற்கும், எல்லா சூழ்நிலைகளிலும், எல்லா வயதினருக்கும் உகந்த புத்தகம் இந்த வேதாகமம் மாத்திரமே. இதை நம் கையில் மட்டுமல்ல நம் இதயத்திலும் சுமக்க கடமைப்பட்டுள்ளோம். ஏனென்றால் இதை நம்முடைய தாய்மொழியில் நமக்கு கொடுப்பதற்கு அநேகர் தங்கள் இரத்தத்தை விலைக்கிரயம் செய்துள்ளனர். எனவே நாம் வேதத்தை கருத்தாய் வாசிப்பது அவசியம். எபி. 4:12இல் தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும், வகையறுக்கிறதாயும் இருக்கிறது என்று வாசிக்கிறோம். எனவே தேவனுடைய வார்த்தையில் இன்னும் அதிகமாய் நிலைத்திருக்க தேவன் தாமே நமக்கு உதவுவாராக. ஆமென்!

– **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." *2 தீமோ. 3:16,17*

ஆவியின் பட்டயம்– வேதாகமம்– உண்மைக்கும் வஞ்சகத்திற்கும் இடையிலான இந்தப் போரில் பயன்படுத்த தேவன் நமக்கு வழங்கிய ஆயுதம். அந்த பட்டயத்தை திறமையாக பயன்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுப்பது அவசியம்.
*– பில்லி கிரஹாம்*

"... மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." *மத்தேயு 4:4*

"தேவ வார்த்தை இரவில் விளக்காகவும், பகலில் ஒளியாகவும் மற்றும் எல்லா நேரங்களிலும் மகிழ்ச்சியை அளிக்கிறதாகவும் உள்ளது." *– சார்லஸ் எச். ஸ்பர்ஜன்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



சந்திக்கப்படாத மக்களை சந்திக்கும் இயக்கத்தின் அன்பு பங்காளர்களே!

தேவனுடைய வார்த்தையில் நிலைத் திருத்தல் என்பது தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட பண்புகளில் முதலானது. இந்த பிப்ரவரி மாத பத்திரிக்கையின் மையக்கருத்தும் இதுவேயாகும். பரி. பவுல் தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாவது நிருபத்தில் இவ்வாறு கூறுகிறார், "தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசு கிறிஸ்து, என் சுவிசேஷத்தின்படியே, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள். இந்த சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை" (2 தீமோ. 2:8,9). தேவ வசனத்திற்குக் கீழ்படிய மாத்திரம் நாம் அழைக்கப்படாமல் அதனிமித்தம் பாடனு பவிக்கவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். மேலும் தேவவசனம் கட்டப்பட்டிருக்கவில்லை என்ற மாபெரும் உண்மையையும் பரி. பவுல் எடுத்துரைக்கிறார். எதிர்ப்புகளின் நடுவிலும், எல்லா இடங்களிலும் சுவிசேஷம் காட்டுத் தீயைப்போல பரவிக்கொண்டிருப்பதை இந்நாட்களில் நாம் அனுபவப்பூர்வமாக கண்டு வருகிறோம்.

பரி. பவுல் தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாவது நிருபத்தில் முதல் மற்றும் இரண்டாவது அத்தியாயங்களில் சுவிசேஷத்திற்கு, சத்திய வசனத்திற்கு தான் வெட்கப்படுவதில்லை என்று தைரியமாக உரைக்கிறார். பவுல் தனது சீடரான தீமோத்தேயுக்கு ஊழியத்தில் கடைபிடிக்க வேண்டிய மூன்று முக்கியப் பண்புகளை எடுத்துரைக்கிறார். முதலாவதாக வெட்கப்படாத ஊழியக்காரனாகவும், இரண்டாவது சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற ஊழியக்காரனாகவும், மூன்றாவது தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிற்கும் ஊழியக்காரனாகவும், இருக்க வேண்டும் (2தீமோ. 2:15) என்று போதிக்கிறார். ஆகவே கடவுளுக்குமுன் ஏற்கப்பட்ட ஊழியக்காரராக நாம் எல்லா இடங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும் தேவ வசனத்தை போதிக்கத்தக்க அதிகாரத் தினைப் பெற்றிருக்கிறோம். பரி. பவுல் 2 தீமோ. 4:2இல் கூறியிருக்கிறபடி சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தை பிரசங்கம் செய்து,... கண்டித்து, கடிந்துகொண்டு, புத்தி சொல்ல அழைக்கப்படுகிறோம்.

**பெயிண்ட் பணித்தள கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள்:** டிசம்பர் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் பெயிண்ட் பணித்தளத்தில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் 20,000 பேருக்கு அதிகமானோர் கலந்துகொண்டனர். இதில் மக்கள் தலைவர்கள் அநேகர் கலந்துகொண்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துதலைக் கூறினார்கள்.

**சாங்வி மாணவர் விடுதி முதலாம் தளம் அர்ப்பணிப்பு விழா:** மஹாராஷ்டிரா மாநிலம், சாங்வி மாணவர் விடுதியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் முதலாம் தளம் டிசம்பர் 22ஆம் தேதி அன்று மிஷனெரிகள், விசுவாசிகள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் முன்னிலையில் பிரதிஷ்டை

செய்யப்பட்டது. மாணவர்கள் தங்க வசதியாக இருக்கும்படி இக்கட்டிடம் கட்ட பொருளுதவி செய்த ஆதரவாளர்கள் அனைவருக்கும் இயக்கத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**தமிழக பணித்தளங்களில் ஊழியர்களை சந்தித்தல்:** டிசம்பர் 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் தமிழக பணித்தளங்களில் பணிபுரியும் மிஷனெரிக் குடும்பங்களைச் சந்தித்து ஊழிய விவரங்களை அறிந்து கொள்ள, அவர்களை உற்சாகப்படுத்த தேவன் உதவி செய்தார்.

**காவல் துறையின் ஜெபக்கூடுகை – தூத்துக்குடி:** ஜனவரி 5ஆம் தேதி தூத்துக்குடியில், தமிழக காவல் துறையின் ஜெப ஐக்கியத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த குடும்ப ஐக்கிய கூடுகைக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கனமான பொறுப்புகள், வேலையின் அழுத்தங்கள் நடுவில் தங்களது துறைக்காக, தேசத்திற்காக கிரமமாக ஜெபிக்கக்கூடுகிறார்கள். தேவன் எவ்வாறு மகத்துவமான காரியங்களை செய்துவருகிறார் என்பதனை அவர்கள் எடுத்தியம்பிய சாட்சிகளிலிருந்து உணர்ந்து கொண்டேன். அவர்கள் மத்தியில் தேவவசனத்தைப் பகிர்ந்துகொள்ள எனக்கு கர்த்தர் கிருபை செய்தார்.

**கிறிஸ்தவ நிர்வாக இயக்கத்தினரோடு சந்திப்பு (Christian Institute of Management):** கிறிஸ்தவ நிர்வாக இயக்கத்தின் செயல் இயக்குனர் மற்றும் திட்ட இயக்குனரோடு ஒரு திட்டமிடல் கூடுகை நடந்தது. நம்முடைய இயக்கத்தின் செயலர்களுக்கும், மிஷனெரிகளுக்கும், அவர்களுடைய பணிக்காலங்களில் மூன்று விதமான நிலைகளில் தலைமைத்துவ பயிற்சி கொடுக்க தீர்மானித்துள்ளோம். நிர்வாகத்தில் மற்றும் ஊழியத்தில் இன்னும் வல்லமையாக செயல்பட இவ்வித பயிற்சிகள் உதவிட ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**சித்தூர் மற்றும் அனந்தபூர் பிராந்திய விஜயம்:** ஜனவரி 8ஆம் தேதியிலிருந்து ஆந்திரா மாநிலத்தின் பணித்தளங்களைப் பார்வையிடவும், அதிலிருந்து தெரிந்துகொண்டவைகளின் அடிப்படையில் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் செயல்படுத்தப்படவேண்டிய யுக்திகளைப் பற்றியும் ஆலோசனை செய்தோம்.

### பிப்ரவரி மாத நிகழ்ச்சிகளுக்காக ஜெபியுங்கள்

**காந்தேஷ் பிராந்திய விஜயம்:** தேவனுக்குச் சித்தமானால் பிப். 1 மற்றும் 2ஆம் தேதிகளில் காந்தேஷ் பிராந்திய பணித்தளங்களைப் பார்வையிட இருக்கிறேன்.

**தேசிய திட்டக் கூடுகை:** 2025ஆம் ஆண்டின் தேசிய திட்டக் கூடுகை பிப். 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. 7ஆம் தேதி முழு உபவாச நாளாக அனுசரிக்கப்படவிருக்கிறது. இந்த கூடுகைக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**செயற்குழு கூடுகை:** பிப். 10ஆம் தேதி இயக்கத்தின் செயற்குழு கூடுகை நடைபெறவுள்ளது. பங்குபெறும் தலைவர்களுக்காக, கூடுகைக்காக ஜெபியுங்கள்.

**வட இந்திய முன்னேற்றப்பணி ஊழியர்களின் பயிற்சி:** வட இந்தியாவில் முன்னேற்றப்பணி ஊழியம் செய்யும் நமது ஊழியர்களுக்கு பிப். 11ஆம் தேதி சென்னையில் வைத்து பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பிராந்திய பணித்தள செயலர்களின் கூடுகை:** பிப்ரவரி மாதம் இரண்டு நாட்கள் பிராந்திய செயலர்களின் கூடுகை சென்னையில் நடக்கவிருக்கிறது.

**பிராந்திய செயலர்களின் பயிற்சி:** பிராந்திய பணித்தள செயலர்களுக்கு பணித்தள நிர்வாக மற்றும் தலைமைத்துவம் சார்ந்த பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

**ஓய்வு பெற்ற மிஷனெரிகளின் கூடுகை:** பிப். 19 மற்றும் 20ஆம் தேதிகளில் மதுரையில் ஓய்வு பெற்ற மிஷனெரிகள் குடும்பமாக கூட இருக்கின்றனர்.

**சத்தீஸ்கர் மாநில ஊழியத்தின் வெள்ளி விழா:** சத்தீஸ்கர் மாநிலத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் ஆரம்பித்து 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு அங்கு பணிபுரியும் மிஷனெரிகளும், சபை விசுவாசிகளும் இணைந்து தேவனின் உண்மைத்துவத்துக்கும், அற்புத வழி நடத்துதலுக்கும் நன்றி சொல்லும் வண்ணம் பிப். 21 முதல் 23 வரை வெள்ளி விழா கொண்டாட திட்டமிட்டுள்ளனர். இன்னும் சந்திக்கப்படாத மக்களை சந்திக்க சபையின் விசுவாசிகளை தேவன் ஊக்கப்படுத்த ஜெபிப்போம்.

அடுத்த ஆறு ஆண்டுகளில் 1000 மிஷனெரிகளை தமிழ் நாட்டிலிருந்து கண்டுபிடித்து அனுப்ப தமிழக முன்னேற்றப்பணி ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதித்து வெற்றிபெறச் செய்ய ஜெபித்துக்கொள்ளுங்கள். உங்கள் ஜெபமே அதனை நிறைவேற்றித்தரும்.

அன்பின் வாசகர்களே, ஜெப வீரர்களே! உங்களது ஊக்கமான ஜெபத்திற்காக நன்றி நவில்கிறோம். அதுவே எங்களை முந்தித்தள்ளி, சுவிசேஷம் அறிவித்து, அதன் மூலம் மறுமலர்ச்சியடையும் ஒரு சமூகத்தினைக்காண உதவுகிறது. எங்களின் ஜெபங்களில் நீங்கள் நினைவுகூறப்படுகிறீர்கள். தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

தேவ ஊழியத்தில் உங்கள் உடன் ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

## ஊழியர் பிரதிஷ்டை



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மேற்கு மும்பை ஜெபக்குழு சார்பில் மஹாராஷ்டிரா மாநிலம், காந்தேஷ் பிராந்தியத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரி குடும்பம் 12.01.2025 அன்று தமிழ் மெத்தடிஸ்ட் தானே, சபையின் போதகர் அருட்திரு. எஸ். ரத்னமணி அவர்களால், இந்திய சுவிசேஷ லூத்தரன் திருச்சபையில் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இம்மிஷனெரி குடும்பத்தை திரு. காட்வின் தர்மசீலன் அவர்கள் மற்றும் ஆமென்குழம் ஜெபக்குழுவினர் தங்கள் ஜெபத்தினாலும், ஈகையினாலும் தாங்கி வருகின்றனர்.

**அருட்திரு. ஆர். அருள்மணி,** விரிவுப்பணி செயலர் – மேற்கு மும்பை

# தேவ வார்த்தையில் நிலைத்திருப்பது



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்னும் வளரும் மிஷனெரி இயக்கத்திற்கு ஆண்டவர் பாராட்டி வரும் ஆசீர்வாதங்கள் அநேகம். அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த மிஷனெரிப்பணி இன்று பரந்து விரிந்து வளர்ந்திருப்பதற்கு மிக முக்கிய அடிப்படையான காரணம் ஜெபம். அத்துடன் நமது மூத்த தலைவர்கள் இந்த இயக்கத்திற்காக வடிவமைத்த நெறிமுறைகள் (Ethos). இன்று ஒன்பது நெறிமுறைகள் வரையறுக்கப்பட்டு அதை நிறைவேற்றி வருவதற்கு ஆண்டவர் உதவி செய்கிறார். இந்த 2025ஆம் ஆண்டு மீண்டும் இந்த நெறிமுறைகளைக் குறித்து இன்னும் அதிகம் சிந்தித்து செயல்படுத்த இயக்கமாக முன்வந்துள்ளோம்.

இந்த மாதம் முதல் நெறிமுறையாகிய **"தேவ வார்த்தையில் நிலைத்திருப்பது"** (1 யோ. 3:24) என்பதை நாம் சிந்தித்து, நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் எவ்விதம் இந்த நெறிமுறையைப் பின்பற்றுகிறோம் அல்லது நடைமுறைப்படுத்துகிறோம் என்பதை சீர்தூக்கிப்பார்க்க அழைக்கப்படுகிறோம். இதில் ஒவ்வொரு கிறிஸ்தவ தனிமனிதனுடைய செயல்பாடு மிக முக்கியம். மற்றவர்களைக் கைகாட்டி எளிதாக பேசிவிடலாம். ஆனால் நான், என்னுடைய தனிப்பட்ட வாழ்வில் எப்படி அவருடைய வார்த்தைகளைக் கடைப்பிடிக்கிறேன் என்பது மிக மிக அவசியம்.

**நிலைத்திருத்தல்** என்பது ஏதோ சில நாட்கள், சில மாதங்கள், சில வருடங்கள் மாத்திரம் அல்ல, நமது ஆயுள் முழுவதும் வசனத்தில் நிலைத்திருத்தல் என்று அர்த்தம். அதைத்தான் ஆண்டவர் எதிர் பார்க்கிறார். இன்றைக்கு அநேகர் ஆன்மீகவாதிகள் மற்றும் அரசியல்வாதிகளுடைய வார்த்தைகளில் நிலைத்திருக்கிறார்கள். ஆனால் நாமோ தேவ வார்த்தையில் நிலைத்திருக்க அழைக்கப்படுகிறோம். அப்படியானால் இது ஒரு ஆவிக்குரிய நிலைப்பாடு.

**நிலைத்திருத்தல்** என்பது ஒரு செயலாக்கம். தேவ வார்த்தைகளைத் தினமும் வாசிக்கலாம், கேட்கலாம், பார்க்கலாம். ஆனால் அந்த வார்த்தைகள் என்னில், என்னுடைய தனிப்பட்ட வாழ்வில் எப்படி செயல்படுகிறது என்பது மிக மிக முக்கியம். **''அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்''** (1 யோ. 3:24).

## கிறிஸ்து எனக்குள்... நான் கிறிஸ்துவுக்குள்...

கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வைக் குறித்து வேதம் தெளிவாகச் சொல்கிறது. கட்டளைகள், கற்பனைகள் எல்லாம் தேவ வார்த்தைகளைக் குறிக்கிறது. இவைகளில் நிலைத்திருக்க வேண்டுமென்றால் முதலாவது நாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டும். அந்த வார்த்தையை நமக்கு சொந்தமாக்க வேண்டும். அந்த வார்த்தையின்படி நாம் வாழ வேண்டும். அந்த வார்த்தையே ஆண்டவர். ஆகவே தான் யோவான் எழுதுகிறார் **“ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது”** (யோ. 1:1). “அந்த வார்த்தை மாம்சமாகி, (இயேசு கிறிஸ்து) கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்” (யோ. 1:14). நாம் தேவ வார்த்தையில் நிலைத்திருக்கும்போது நம்முடைய வாழ்வு மாற்றம் பெறுகிறது.

## கனிகொடுக்கும் வாழ்வு

**“ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்”** (யோ. 15:5). கிறிஸ்து என்னில், நான் அவரில், அவருடைய வார்த்தைகள் என்னில் நிலைத்திருக்கும்போது மிகுந்த கனி கொடுக்கும் வாழ்வைப் பெற்றுக் கொள்வோம். எப்படி கொடியானது செடியில் நிலைத்திருந்து அதிக கனிகளைத் தருகிறதோ, அதுபோல் நாமும் ஆண்டவருடைய வார்த்தையில் நிலைத்திருந்தால் அதிக கனிகள் கொடுப்போம். அப்படியானால் என்னுடைய வாழ்க்கை மற்றவர்களுக்குப் பிரயோஜனமான வாழ்வாக மாறுகிறது. **“நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்”** (யோ. 15:8). நாமும் அவருடைய சீஷர்களாய் வாழ்ந்து, பிதாவை மகிமைப்படுத்துவோம். கனியுள்ள வாழ்வு கர்த்தருக்காக வாழ்வோம்.

## பெற்றுக்கொள்ளும் வாழ்வு

**“நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்”** (யோ. 15:7). நாம் ஆண்டவருடைய வார்த்தைகளின்படி நடக்கும்போது நம்முடைய ஜெபம் அல்லது நாம் வேண்டிக்கொள்ளுகிற காரியங்கள் நமக்கு கொடுக்கப்படும். நம்முடைய ஜெபம் கேட்கப்படுவதற்கு அவருடைய வார்த்தைகளில் நிலைத்திருப்பது மிக மிக அவசியமானதாகும். **வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது** (நீதி. 28:9). அப்படியானால் வேத வசனத்தின்படி நடக்கும்போது நாம் வேண்டிக் கொள்ளுகிற காரியங்களைப் பெற்றுக் கொள்வோம். பெற்றுக்கொள்ளும் வாழ்வு பரமனுக்காக வாழ்வோம்.

## கட்டப்படும் வாழ்வு

**‘‘ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்’’** (மத்.7:24). இங்கே ஆண்டவர் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வு எப்படி கட்டப்பட வேண்டும் என்பதை கற்றுத்தருகிறார்.

அவருடைய வார்த்தைகளைக் கேட்பதோடு விட்டுவிடாமல் அந்த வார்த்தைகளின்படி செய்ய வேண்டும் என்பது நம்மைப் படைத்த ஆண்டவருடைய மிகப் பெரிய எதிர்பார்ப்பு. பாவம் நிறைந்த, அசுத்தம் நிறைந்த, அநீதி நிறைந்த இந்த உலக வாழ்க்கையில் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வு என்னும் கட்டடம் அல்லது வீடு உறுதியோடு நிலைத் திருப்பதற்குக் கன்மலையாகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளின்படி நாம் செயல்பட வேண்டும். கட்டப்படும் வாழ்வு கர்த்தருக்காக வாழ்வோம்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, எத்தனையோ ஆண்டுகள் நீங்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்னும் இந்த மிஷனெரி இயக்கத்தின் அங்கத்தினர்களாக, ஆதரவாளர்களாக, ஜெபப் பங்காளர்களாக, தலைவர்களாக இருக்கலாம். ஆனால் இந்தப் புதிய ஆண்டிலே நமது இயக்கத்தின் நெறிமுறைகளை இன்னும் அதிகமாகத் தெரிந்துகொண்டு, அதை நமது வாழ்வில் பிரதிபலிப்போம். நம்மைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருக்கிற அநேக கிறிஸ்தவர்களிலும் **(இவர்களிலும்)** அதிகமாய் ஆண்டவருடைய வார்த்தைகளில் நிலைத்திருந்து, அவருக்காக சாட்சிகளாக வாழ தேவன் நமக்கு அருள் புரிவாராக!

**– அருட்திரு. S. டேனியல் தாமஸ்,**
தமிழ்நாடு & பாண்டி விரிவுப்பணி செயலர்.



# பெரும் சோகத்தில் ஆழ்த்திய வயநாடு நிலச்சரிவு

30.07.2024 அன்று அதிகாலை அடுத்தடுத்து நடந்த இரண்டு நிலச்சரிவுகள், ஆயிரக்கணக்கான மக்கள் உறக்கத்தில் கொல்லப்பட்ட பெரும் துயரசம்பவம் கேரள மாநிலம், வயநாடு மாவட்டம், மேப்பாடி பஞ்சாயத்தின் முண்டக்கை மற்றும் சூரல்மலை கிராமங்களை சுவடே இல்லாமல் மண்மேடாக்கிவிட்டது. உடனடியாக அந்தப் பகுதியைப் பார்வையிடவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி தேவைகளை மிகச்சிறிய அளவில் சந்திக்கவும் தேவன் கிருபை செய்தார்.

மறுபடியும் டிசம்பர் 16ஆம் தேதி மறைதிரு. தாமஸ் மேத்யூ, மறைதிரு. ஆபிரகாம் தாமஸ், மறைதிரு. பாபு மற்றும் மறைதிரு. கோல்டன் ஜே. இன்பராஜ் ஆகிய நான்கு பேர் கொண்ட குழு இந்தப் பகுதியைப் பார்வையிடவும், பாதிக்கப்பட்ட சில மக்களை நேரில் சந்தித்து பேசவும் தேவன் கிருபை செய்தார். அதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட 30 குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களது குடும்பத்தின் சில அடிப்படை தேவைகளை சந்திக்க நான்கு லட்சம் ரூபாய் வரை திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தேவைகள் சந்திக்கப்படவும், இந்த மக்கள் இயேசு கிறிஸ்துவில் ஆறுதலைப் பெற்றுக்கொள்ளவும் ஜெபியுங்கள்.



**மறைதிரு. கோல்டன் இன்பராஜ்,**
முன்னேற்றப்பணி செயலர் – மலபார், கேரளா



## தேர்வு எழுதும் பிள்ளைகளுக்காக

# ஜெபிப்போம்

இந்தக் கல்வியாண்டு (2024–25) அரசு பொதுத்தேர்வு எழுதப்போகும் நமது மிஷனரிகளுடைய பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

இவர்களுக்காகவும் நமது இயக்கத்தின் அங்கத்தினர்களின் பிள்ளைகள் மற்றும் விடுதிப் பிள்ளைகளுக்காகவும் உங்கள் அனுதின ஜெபத்தில் பாரத்தோடு ஜெபிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### 10 -ஆம் வகுப்பு

| வ. எண் | பிள்ளையின் பெயர் | பெற்றோரின் பெயர் |
|---|---|---|
| 1. | அலோன்சோ | – அருள்திரு. குமார் பால் K. |
| 2. | அனுராக் ஜாண் | – திரு. மிர்ஜோ கிஸ்கு |
| 3. | ஜோயல் பால் | – திரு. பால் டேனியல் V. |
| 4. | மார்க் டேனியல் V. | – அருள்திரு. விஜயகுமார் K. |
| 5. | ஜெப கிரேஸியா | – திரு. குமார் V. |
| 6. | எமில் பிரைனர்ட் | – அருள்திரு. ஸ்ரீனிவாசன் J. |
| 7. | மேரி சிலெய்சர் | – திரு. சிவ சங்கரன் |
| 8. | சியோன் பிரின்ஸ் டேவிட் | – திரு. சஞ்ஜிப் ஆனந்த் |
| 9. | சியோன் பிரின்ஸ் சாலமோன் | – திரு. சஞ்ஜிப் ஆனந்த் |
| 10. | சாம் கோல்டன் ராஜ் | – திரு. விஜய் பாபு S. |
| 11. | அலெக்ஸ் மேத்யூ பானி | – அருள்திரு. மனோஜ் குமார் பானி |
| 12. | பினோபின் சாமுவேல் | – திரு. வினு M. |
| 13. | ஷ்ரிஷ்டி குமாரி | – அருள்திரு. வசாவா ராமேஷ்பாய் உல்சிங் |
| 14. | ஸ்டீவன் குமார் வடேகர் | – திரு. வடேகர் திலிப்பாய் ரங்குபாய் |
| 15. | அஷ்லி லேவீஸ் | – திரு. செந்தில் முருகன் V. |
| 16. | K. நிங்டௌபோ | – திரு. டிடுங்போவ் K. |
| 17. | நிசி வசாவா | – அருள்திரு. வசாவா ஆஜுபாய் ராமுபாய் |
| 18. | பிரின்ஸ் குமார் வகேரா | – திரு. வகேரா பிரமோத்குமார் |
| 19. | சுமிதா சலோனி | – அருள்திரு. சுர்கார் ராமேஷ்பாய் |
| 20. | டேவிட் பன்னா | – திரு. ஜாஹர் சாய் பன்னா |
| 21. | ஃப்ரக்ரன்ஸ் லாட் | – அருள்திரு. த்சாங்சே சங்டாம் |

| | | |
|---|---|---|
| 22. | யூனிஸ் சிந்துஜா | – திரு. ராமமுனி J.B.V. பிரசாத் |
| 23. | கிஃப்ட்சன் சம்ப்ரமரி | – திரு. கஜன் சம்ப்ரமரி |
| 24. | சாம் கிளாட்சன் | – அருள்திரு. கோபி கிருஷ்ணன் M. |
| 25. | பிரேம் ரிச்சர்ட் | – அருள்திரு. ஜாண் டேவிட் |
| 26. | லிடியா ஷாலினி S. | – திரு. சங்கர் M. |
| 27. | ஜாஸ்மின் ஏஞ்சல் | – அருள்திரு. ஜஸ்டின் Y. |
| 28. | கிஃப்ட்சன் J. ராஜ் | – திரு. புஷ்பராஜ் R. |
| 29. | ஜாண் பெர்னார்ட் | – திரு. அருள்ராஜ் எபினேசர் D. |
| 30. | சந்தேஷ் | – திரு. பாலாஜி நெட்டாலம் |
| 31. | அசரியா சாமுவேல் ராஜ் | – திரு. ஜாண் அருள்ராஜ் |
| 32. | ரேச்சல் பீரோ | – திருமதி. ஜிப்போரா பீரோ |

## 12 -ஆம் வகுப்பு

| வ. எண் | பிள்ளையின் பெயர் | பெற்றோரின் பெயர் |
|---|---|---|
| 1. | ஆஷின் அலெக்ஸ் பிரசாத் | – அருட்திரு. ஜாண் குமார் C. |
| 2. | ஜோவிட்டா சன்னிதி | – திரு. பெஞ்சமின் B. |
| 3. | பால் ஜாய்சன் | – அருட்திரு. பொன்னுசாமி S. |
| 4. | காலேப் பிரய்னார்ட் ராஜ் | – அருட்திரு. விஜயன் T. |
| 5. | ஆயூஷ் பிபோர் கிஸ்கு | – திரு. மிர்ஜ்யோ கிஸ்கு |
| 6. | நித்தின் எபினேசர் புன்யா | – அருட்திரு. லவ்லின் புன்யா |
| 7. | அபிகா கிரேஸ் | – திரு. எட்வர்ட் ராஜதுரை R. |
| 8. | ஜாய்ஸ் ஏஞ்சலின் | – அருட்திரு. அமிர்காந்தா டிகல் |
| 9. | நய்திக் குமார் | – அருட்திரு. சோமாபாய் வாலுபாய் |
| 10. | ஏர்னஸ்ட் கமலேஷ் | – திரு. கமித் கமலேஷ் சிங்கபாய் |
| 11. | ஜெபா மார்ஸியா | – திரு. குமார் V. |
| 12. | ஐடா ஜெயா ஷாரோன் | – அருட்திரு. டேனியல் அருள்மணி J. |
| 13. | ஜோசப் டேனியல் | – அருட்திரு. செந்தில் குமார் P. |
| 14. | சலோனி பானி | – அருட்திரு. மனோஜ் குமார் பானி |
| 15. | சுன்கிம் | – திரு. டிட்டுங்பௌ K. |
| 16. | பியர்சன் பிரின்ஸ் | – அருட்திரு. போர்சத் பாபுபாய் |
| 17. | எமிலின் ஷாரோன் | – திரு. கின்ஸ்லி A.R. |
| 18. | ரோஷ்னி | – திரு. பத்வி சோமாலியா |
| 19. | ராக்லண்ட் | – திரு. பால்ராஜ் R. |
| 20. | விஜ்யகுமார் நாயக் | – அருட்திரு. மஞ்சியா நாயக் G. |
| 21. | பிரென்சி ஜாஸ்மின் | – திரு. பர்னபாஸ் A. |
| 22. | ஷெர்வின் எபினேசர் | – திரு. ஜெபகுமார் P. |
| 23. | கிறிஸ்டினா பிரீத்தி ஏஞ்சல் | – திரு. துரைசாமி K. |
| 24. | ஜட்சன் டெய்லர் | – அருட்திரு. ஜஸ்டின் Y. |
| 25. | மெல்வின் பிளெஸ்ஸோ | – திரு. மித்ரன் E. |
| 26. | ஸ்வீட்லின் ரேச்சல் | – அருட்திரு. ஜாண் பெனின் J. |
| 27. | அனுராக் | – திரு. கெடாம் ஸ்ரீனிவாச ராவ் |

நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் (யோசுவா 24:15)

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு பெங்களூர் – ஸ்கேன்

# ஆவிக்குரிய குடும்ப கூடுகை

கருப்பொருள் **இவைகளிலும் அதிகமாய்.** (யோவான் 21:15)

23rd பிப்ரவரி 2025 ஞாயிறு காலை 11 மணி முதல் மாலை 5 வரை

சிறப்பு செய்தியாளர்

**அருட் திரு. D.பால் சாலமோன்**

(FMPB- சென்னை)

தலைமை

**அருட்திரு. சதீஷ் தீமோத்தேயு பால்**

சபை ஆயர்

இடம்

**சி.எஸ்.ஐ. பரி லூக்கா ஆலயம்**

சாம்ராஜ்பேட்டை பெங்களூரு

பதிவுகட்டணம்:

பெரியோர் ₹50

சிறுவர் ₹30

குடும்பமாக பங்கு பெறுங்கள் மற்றும் ஆசீர்வாதங்களை பெறுங்கள்.

**சிறுவர்களுக்கு தனி கூடுகை உண்டு**

For Contacts: 78890 50020 | 75892 29388

Email: justin.y@fmpb.org

## நிதி அலுவலகத்திலிருந்து




**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI** - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

**SBI** - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank** - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

## காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

## கோவை மாவட்டம் வாலிபர் முகாம் - 2025

இடம்: T.E.L.C. ஆலயம், மணிக்கூண்டு அருகில், டவுன் ஹால், கோவை
நாள்: 02.02.2025 மாலை 3.30 மணி முதல் இரவு 8.30 வரை
செய்தியாளர்கள்: **Rev. பால் சாலமோன்,** FMPB, Chennai.
**சகோ. வெஸ்லி மேக்ஸ்வேல்** மற்றும் **சகோ. ஜோஷ்வா வெங்கடேஷ்**
தொடர்புக்கு: **அருள்திரு. பி. டேவிட்** (8265307040), **திரு. அப்பாஸ்** (9944542283)

# பணித்தள விஜயம்



மதுரையிலிருந்து 20 பேர் கொண்ட குழுவினராக அக்டோபர் 12 முதல் 19ஆம் தேதி வரை ஜம்மு மாநிலத்தி லுள்ள பணித்தளங்களைப் பார்வை யிடச் சென்றோம். எங்கள் குழுவில் ஐந்து வாலிபர்களும் கலந்து கொண்டனர். அக்னூர் பணித்தள ஆலயத்தில் ஜம்மு பிராந்தியத்திலுள்ள அனைத்து மிஷனெரிகளையும் சந்தித்து, அவர்களுடன் இணைந்து ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். நரோட் பணித்தளத்தி லுள்ள நகரி கிராமத்தில் கட்டப்படவுள்ள ஆலய நிலத்தில் மிஷனெரி மற்றும் விசுவாசிகளோடு இணைந்து ஜெபித்தோம். பின்னர் உதம்பூர் பணித்தளத்தில் விசுவாசிகளோடு தேவனை ஆராதித்தோம். சிறுவர்களின் நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது. சவால்கள் மத்தியில் ஊழியம் செய்யும் மிஷனெரிகளுக்காக இன்னும் அதிகமாக ஜெபிக்க தீர்மானித்து பத்திரமாக மதுரை வந்து சேர்ந்தோம். தேவனுக்கே மகிமை!

**திரு. ஐசக் தனசிங்,** முன்னேற்றப்பணி செயலர்–மதுரை

# மகிமைக்குள் பிரவேசித்தார்



தென்காசி மாவட்டம், பாவூர்சத்திரத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் கௌரவ முன்னேற்றப்பணி செயலர் திரு. தாவீது தர்மராஜ் அவர்களின் மனைவி திருமதி. மெர்சி அன்னபாக்கியம் (ஆசிரியை) அவர்கள் கடந்த 20.11.2024 அன்று தன் இறுதி ஓட்டத்தை முடித்து தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்துள்ளார்கள். அக்கா அவர்கள் தேவனுடைய ஊழியத்தை அதிகமாக நேசித்தவர்கள். நமது இயக்கத்தின் மிஷனெரியை ஜெபித்து தாங்கி வந்தார்கள். அண்ண னுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து ஊழியத்திலும் தோள் கொடுத்து செயல்பட்டவர்கள். அண்ணனின் ஆறுதலுக்காகவும், பிள்ளைகள் திரு. அகஸ்டின் ராஜசேகர் குடும்பம், திரு. ஜாய்னர் செபஸ்டின் குடும்பத்தினரின் ஆறுதலுக்காகவும் ஜெபிப்போம்.

**அருள்திரு. ஆசீர் செல்வராஜ்,** விரிவுப் பணி செயலர் – தென்காசி.

# போ அல்லது அனுப்பு

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சின்னம் உருவான வரலாறு

ஒரு இயக்கத்தின் தரிசனத்தையும், நோக்கத்தையும், வெளிக் காட்டுவது அதின் சின்னமாகும் (Emblem/ Logo). அப்படியாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சின்னமானது அநேக கருத்துக்களை உள்ளடக்கிய சின்னமாக நட்சத்திர வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் விளக்கத்தை நமது மூத்த மிஷனெரி அண்ணனும், அதை வடிவமைத்த ஓவியரு மான திரு. நவநீதர் அண்ணனிடம் கேட்டு தொகுத்து எழுதியுள்ளோம். இதனை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கத்தினர்கள் அனைவரும் அறிந்திருக்கவேண்டியது அவசியம்.

1966ஆம் ஆண்டு அறைகூவல் பத்திரிக்கையின் ஆசிரியராக டாக்டர். தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் இருந்தபோது இந்தச் சின்னமானது ஓவியர் திரு. துரைசாமி அவர்களால் வடிவமைக்கப்பட்டது. அதன்பின் 1974ஆம் ஆண்டு நம் இயக்கத்தின் பொது காரியதரிசியாய் இருந்த டாக்டர். எமில் ஜெபசிங் அண்ணன் நமது இயக்கத்தில் புதிதாக இணைந்திருந்த ஓவியர் திரு. நவநீதர் அண்ணனை அழைத்து நீங்கள் 'உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' (மாற்கு 16:15) என்ற வசனத்தை மையமாகக்கொண்டு புதிய சின்னத்தை வரையும்படி கேட்டுக்கொண்டார். எமில் அண்ணன் சொன்னதாவது:

**1. சிலுவை சின்னத்தின் மையமாக இருக்க வேண்டும்:** சிலுவையின் கருத்து என்னவெனில் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவே நமது இயக்கத்தின் மையமாக, தலைவராக இருக்கிறார் என்பதை விளக்குகிறது.

**2. அதற்கு கீழ் வேதாகமம்:** முழு வேதாகமத்தின் மையமே சிலுவைதான். அவருடைய வார்த்தையே சுவிசேஷம். பரிசுத்த வேதாகமமே நமது அடித்தளம். வேதத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியங்களும், திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

**3. அதற்கு கீழ் உலகம்:** உலகமெங்கும் போய் என்ற கருத்தை உலகப்படம் குறிக்கிறது.

**4. உலகத்தைச் சுற்றி எக்காளம்:** ஒவ்வொரு கிறிஸ்தவரும் சுவிசேஷத்தை அறிவிக்கும் எக்காளம் என்பது இதன் அர்த்தம்.

**5. சின்னத்தைச் சுற்றி எட்டு அம்பு குறிகள்:** இவை எட்டுத்திசைக்கும் சென்று சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் (போ அல்லது அனுப்பு) GO OR SEND என்ற எட்டு எழுத்துக்கள் ஒவ்வொரு குறியிலும் ஒவ்வொரு எழுத்தாக பொருத்தப்பட்டுள்ளது. இந்த எட்டு எழுத்துக்களும் மாற்கு 16:15 வசனத்தை மைய மாகக்கொண்டு உருவாக்கப்பட்டது. சிலுவை, வேதாகமம், உலகம், எக்காளம், எட்டு

திசைக்கும் சுவிசேஷம் இவ்வாறு எமில் ஜெபசிங் அண்ணன் கருத்து சொல்ல இச்சின்னம் உருவாக்கப்பட்டது. பின் நாட்களில் திரு. கிங்ஸ்லி அருணோதயகுமார் அவர்களால் இச்சின்னம் மெருகேற்றப்பட்டு வடிவமைக்கப்பட்டது.

வேதத்தை நமது வாழ்வில் மையமாகக் கொண்டு கிறிஸ்துவுக்காகப் பாடுபடவும், எதிர்ப்புகள் எதுவந்தாலும் எத்திசைக்கும் சென்று சிலுவையின் சுவிசேஷத்தை அறிவிக்கவும் வேண்டும். இவ்வாறு இவ்வியக்கத்தின் அங்கத்தினர் அனைவருக்கும் தேசத்தை சந்திக்கும் கடமையையும், பொறுப்பையும் இச்சின்னம் வலியுறுத்துகிறது. தேவப்பணிக்கு புறப்பட்டுப்போக அழைப்புப் பெறாதோர் இப்பணியினை ஜெபத்தினாலும், ஆதரவினாலும் தாங்கிட வலியுறுத்துகிறது. கடைசி இந்தியன் அந்த கல்வாரி அன்பை ருசிக்கும் வரை இளைப்படையாது, சோர்வடையாது சிலுவைக்கு பணிசெய்ய இயேசு கிறிஸ்து நம்மையும் அழைக்கிறார். இச்சின்னத்தின் சிறப்பை உணர்ந்த நாம் அனைவரும் தேவனுக்குப் பணி செய்ய நம்மை அர்ப்பணிப்போம். சிலுவை நாதர் இயேசு தாமே நம் ஒவ்வொருவருக்கும் உதவுவாராக. ஆமென்!

## தரிசனம் பெற்றோர் ஆயிரம் – 2030

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு இளைஞர் இயக்கம். தேவ அழைப்பைப்பெற்ற அநேக வாலிப சகோதர, சகோதரிகள் இந்த இயக்கத்தில் இணைந்து, இந்திய தேசத்தில் வாழ்ந்து வரும் பல இன மக்கள் மத்தியில் தேவப்பணியை நிறைவேற்றி வருகிறார்கள். தேசத்தைக் குறித்ததான இயேசு கிறிஸ்துவின் பாரத்தை நிறைவேற்ற இன்னும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். ஆகவே இதனை நிறைவேற்ற தமிழ் நாட்டின் முன்னேற்றப்பணி ஊழியர்களும் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்களும் பாரத்தோடு ஜெபித்தபோது உருவான தரிசனம். அதாவது வருகிற 2030ஆம் ஆண்டிற்குள் 1000 புதிய வாலிப சகோதர, சகோதரிகளைக் கண்டுபிடித்து இந்த தேசத்தின் மீட்பிற்காக கலாச்சாரம் கடந்து பணிசெய்யும் மிஷனெரிகளாக அனுப்ப வேண்டும் என்பதே இந்த தரிசனத்தி ன் உன்னத நோக்கம். இந்த அவசரமான, அவசியமான இயக்கத்தின் மிகப்பெரிய நோக்கஆயிர நிறைவேற உங்கள் அனைவருடைய ஜெபங்கள் அதிகம் தேவை.

***"ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்"*** *(மத். 9:38).*

மேலும் உங்கள் பகுதியிலுள்ள 12-ம் வகுப்பு முடித்த, கல்லூரியில் பயிலுகின்ற மற்றும் பயின்று முடித்த அனைத்து கிறிஸ்தவ வாலிப சகோதர, சகோதரிகளிடம் இந்த தரிசனத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அத்துடன் நாம் நடத்தும் வாலிபர் கூடுகைகளில் அவர்கள் பங்குபெற உற்சாகப்படுத்துங்கள். இது குறித்ததான கூடுதல் விவரங்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளும்படி பட்சமாய் கேட்டுக்கொள்கிறோம்.

### உங்கள் ஜெபம் வேண்டி

- கிறிஸ்தவ வாலிப சகோதர, சகோதரிகள் மிஷனெரி தரிசனம் பெற,
- அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களைப் பற்றிய கரிசனை ஏற்பட,
- வாலிபர்களை திசை திருப்பக்கூடிய எல்லா அந்தகார கிரியைகளும் அழிக்கப்பட,
- கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் வாலிபப் பிள்ளைகளை தேவனுக்கென்று அர்ப்பணிக்க ஜெபிப்போம்.

# ரத்தியா திருச்சபை வரலாறு



## ஆரம்பம் முதல் ஏப்ரல் 2021 வரை

**ரத்தியா பணித்தளம் – ஹரியானா பிராந்தியம், வட மண்டலம்**

*எழுதியவர்:* **திருமதி. D. ஆக்னஸ் எட்வர்ட்**

### பொதுவானத் தகவல்கள்

ரத்தியா நகரம் ஒரு இந்து சாதுவான (துறவி) ரத்தன் நாத்தின் பெயரால் அழைக்கப்படுகிறது. ஏறக்குறைய 6000 ஆண்டுகள் பழமையான இந்த நகரம் ஒரு செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. ரத்தியா என்பது ஹரியானா மாநிலம் ஃபதேபாத் மாவட்டத்தி லுள்ள ஒரு நகராட்சி ஆகும். 2011 இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ரத்தியா நகராட்சியில் 37,152 பேர் இருந்தனர். பெரும்பாலான மக்கள் வணிகம், விவசாயம் மற்றும் தொழிலாளர் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.



*திரு. ராஜா எட்வின் மோசஸ்*

### ஆரம்பம்

1993ஆம் ஆண்டு மிஷனெரிகளான திரு. ராஜா எட்வின் மோசஸ் மற்றும் திரு. தேவ அன்புக்கண் ஆகியோர் ஜீப் குழுவின் உதவியுடன் வெளிப்புற சந்திப்பு ஊழியம் செய்த போது சுமார் அறுபது பேர் ஜீப்பை சூழ்ந்துகொண்டு மிஷனெரிகளிடம் பிரச்சனை செய்தனர். திடீரென்று ஆயுதமேந்திய தமிழரான ஒரு ராணுவ வீரர் வந்து கும்பலிடமிருந்து மிஷனெரிகளைக் காப்பாற்றி ராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்று, ரத்தியா பகுதியில் அதிக எதிர்ப்பு இருப்பதால் அங்கு ஊழியமும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். இருப்பினும் தேவனின் கிருபையால் 1.7.1994 அன்று ரத்தியா பணித்தளம் திறக்கப்பட்டது. திரு. ராஜா எட்வின் மோசஸ் மற்றும் திருமதி. வனிதா ராணி ஆகியோர் ரத்தியா பணித்தளத்தின் முன்னோடி மிஷனெரிகள் ஆவர். 15.7.1994 அன்று மிஷனெரி குடும்பம் ரத்தியா பணித்தளத்திற்கு வந்த போது கிறிஸ்தவ விரோதிகளிடமிருந்து அச்சுறுத்தலை எதிர்கொண்டனர்.

அவர்கள் மற்ற கடவுள்களின் பெயர்களை உச்சரிக்குமாறு வற்புறுத்தப்பட்டபோதிலும் தேவன் மிஷனெரிகளை பாதுகாத்தார்.

## *ஊழிய வளர்ச்சி*

கிராம ஊழியங்களின் மூலம் பலர் அற்புதங்களை பெற்று கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். முதலில் மொகமத்பூர் சோதர்-ஐச் சேர்ந்த ஒரு முகமதியர் குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். அவரது உறவினரான திரு. பீர்பால் குடும்பம் அசுத்தாவியின் தாக்குதலினால் அவதிப்பட்டனர். மிஷனெரிகளான திரு. ராஜா எட்வின் மோசஸ் மற்றும் அவரது மனைவி திருமதி ராணி, திரு. பீர்பாலின் வீட்டிற்குச் சென்று ஜெபித்தபோது தேவன் அவர்களுக்கு அசுத்தாவியின் தாக்குதலிலிருந்து விடுதலை கொடுத்தார். திரு. பீர்பாலும் அவரது மனைவி திருமதி பாலியும் கிறிஸ்துவை ஏற்றுகொண்டு 1997இல் மொகமத்பூர் சோதர் அருகே உள்ள டோலு கால்வாயில் திரு. ராஜா எட்வின் மோசஸ் அவர்களிடம் ஞானஸ்நானம் எடுத்தனர்.

திரு. பீர்பாலின் பக்கத்து வீட்டுக்காரரான திரு. சோட்டுவின் குடும்பத்தை அசுத்த ஆவியின் அடிமைத்தனத்திலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் விடுவித்தார். அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். திரு. பீர்பால், பிசாசின் அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டிருந்த தனது நண்பர் திரு. மகர்சிங் குடும்பத்தினரிடம் நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டு ஜெபித்தபோது விடுதலை பெற்ற திரு. மகர் சிங்கின் குடும்பம் 23.7.2000 அன்று சோதர்டானியில் திரு. தேவ அன்பக்கண் அவர்களிடம் ஞானஸ்நானம் எடுத்தனர். இந்தக் குடும்பம் திருமதி காந்தாவின் குடும்பத்திற்கு நற்செய்தியை கொண்டு சென்றனர். அவருடைய பதினேழு குதிரைகள் இறந்தன. பதினெட்டாவது குதிரை நோய்வாய்பட்டபோது தேவன்மீது அவர்கள் நம்பிக்கை வைத்து ஜெபித்ததினால் தேவன் அக்குதிரையைக் காப்பாற்றினார். எனவே அக்குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். பின்பு முன்னாள் சர்பஞ்சின் (ஊர்த்தலைவர்) குடும்பமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது. இவ்வாறாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளின் எண்ணிக்கை 2016இல் 989 ஆக உயர்ந்தது. தற்போது ஒவ்வொரு ஆராதனையிலும் சுமார் 70 முதல் 100 பேர் கலந்து கொள்கின்றனர்.

### ரத்தியா ஆலய மூப்பரான திரு. ஹிராலாலின் சாட்சி:



"என் தந்தையும், தாத்தாவும் இந்து பூசாரிகள். மக்கள் குணமடைய எங்கள் வீட்டிற்கு வருவார்கள். என் தந்தையின் மரணத்திற்குப் பிறகு நான் நோய்வாய்ப் பட்டேன். மரணப் படுக்கையில் இருந்த நான் அசுத்தாவியின் தாக்குதலிலிருந்து விடுபடவும், சுகம்பெறவும் பல இடங்களுக்குச் சென்றும் சுகம் கிடைக்கவில்லை. இன்னும் நாற்பது நாட்களில் இறந்து விடுவேன் என்று ஒரு மந்திரவாதி என்னிடம் கூறவே நானும் என் மனைவியும் கதறி அழுதோம். அந்த நேரத்தில் மொகமத்பூர் சோதரைச் சேர்ந்த திருமதி. சந்தோஷ் நற்செய்தியைக் கூறி, எங்களை சத்சங் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கூறினார். அங்கு சொல்லப்பட்ட வேத வசனங்கள் என் வாழ்வில் புதிய நம்பிக்கையை தந்தது. அதைத் தொடர்ந்து ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தில்

நான் பூரண விடுதலையடைந்தேன். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவதற்கு முன் குடிகாரனாகவும், துன்மார்க்கனாகவும் வாழ்ந்த எனக்கு புது வாழ்வு அருளினார். 4.3.2001 அன்று நாங்கள் குடும்பமாய் ஞானஸ்நானம் பெற்றுகொண்டோம். என் ஓய்வு நேரத்தை ஊழியத்தில் செலவிடுகிறேன். என் சகோதரி ராஜஸ்தானில் முழுநேர மிஷனெரியாகவும், சகோதரர் சுதேச ஊழியராகவும் பணி செய்கிறார்கள்."

## ஆராதனைக் குழு மற்றும் சமூகம்

ரத்திய விசுவாசிகள் துவக்கத்தில் எம்.பி. சோதர் ஆலயத்தில் ஆராதித்து வந்தனர். பின்னர் விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகமானதினால் ரத்தியாவில் வசித்து வந்த மிஷனெரி ராஜா எட்விட் வீட்டில் வைத்து ஆராதனை நடத்தப்பட்டது. பின் 2006இல் விசுவாசிகளின் நன்கொடையின் மூலம் ரூ. 80,000-த்தில் ஒரு தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்டது. ரத்தியா திருச்சபையில் சுற்றியுள்ள 17 கிராமங்களைச் சேர்ந்த விசுவாசிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் ஓட் ராஜ்புத், ராய்சீக், தனக், பால்மிகி, பாஜிகர் ஆகிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வாலயத்தைச் சேர்ந்த திருமதி தேவி ராணி ஜெய்பீர்சிங் ராஜஸ்தானிலும், திருமதி குருப்ரீத் மஹாராஷ்டிராவிலும் முழுநேர ஊழியர்களாகவும், திரு. சாம்சுந்தர், திரு. விகாமசிஹ் மற்றும் திரு. குருப்ரீத் சுதேச ஊழியர்களாகவும் நமது இயக்கத்தில் பணிசெய்கின்றனர்.

## ஆலயமும், கட்டுமானமும்

ஆலய நிலம் திரு. பெஹல்வானிடம் ரூ.12 இலட்சத்திற்கு வாங்கப்பட்டது. நிலத்தின் அளவு 12 மர்லா ஆகும். ரத்தியா நகரில் மிஷனெரிகள் பிற மத எதிர்ப்பாளர்களிடமிருந்து அநேக இடையூறுகளை எதிர்கொண்டதால் ஆலயம் கட்டுவது சாத்தியமில்லாத சூழ்நிலையிலும் தொடர் ஜெபத்தின் மூலம் தேவன் அதை சாத்தியமாக்கினார். ஆலயக்கட்டுமானத்தின் போது திரு. போர்சத் பாபுபாய் பணித்தள ஊழியராக இருந்தார். ஆலயத்தின் பெயர்: FMPB ஆலயம், ரத்தியா. 21.6.2011 அன்று அடித்தளம் போடப்பட்டது. விசுவாசி தங்கள் திராணிக்கும் மிஞ்சி ஆலயப்பணிக்காக கொடுத்தனர். 25.11.2011 அன்று அப்போதைய பணித்தள செயலாளர் அருள்திரு. கிறிஸ்டோபர் தாமஸ் அவர்களால் ரத்தியா ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## எதிர்ப்புகள்

ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்தே மிஷனெரிகள் எதிர்ப்பை சந்தித்து வந்தனர். மிஷனெரிகள் தங்கியிருந்த வீட்டு உரிமையாளர்களுக்கு தொந்தரவு கொடுத்ததின் மூலம் அடிக்கடி வீடுதேடும் சூழ்நிலை மிஷனெரிகளுக்கு ஏற்பட்டது. மிஷனெரியின் தோலை உரித்துவிடுவேன் என்று மிரட்டிய ஒருவர் பின்நாட்களில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு அவரது ஒரு கால் அகற்றப்பட்டது. 1997இல் கைப்பிரதி ஊழியம் செய்தபோது கிறிஸ்தவ விரோதிகளால் தாக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர். 1998இல் ஜீப் குழுவில் ஊழியம் செய்தபோது எதிர்ப்பாளர்களின் கும்பல் ஊழியர்களைத் தாக்கி வாகனத்திலிருந்த ரூ.8000 மதிப்புள்ள பொருட்களை எடுத்துச் சென்றனர். 1999-ல் கிறிஸ்தவர்களைப்பற்றி பொய்யான தகவல்களைப் பரப்பியதோடு கிறிஸ்தவத்தை கண்டிக்கும் சேவா என்ற புத்தகத்தை வெளியிட்டனர். இதன் மூலம் பொதுமக்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் மிஷனெரிகள் மீது அதிக வெறுப்பைக் காட்டினர்.

## சில அற்புதங்கள்

- ஸ்கூல்டானியைச் சேர்ந்த ஜந்துராம் ஒரு வைராக்கியமுள்ள விக்கிரக ஆராதனைக்காரர். அவரது குடும்பத்தில் பேரப்பிள்ளைகள் பிறந்து 20 நாட்களுக்குள் மரித்து விடுவதுண்டு. இவ்வாறு பல குழந்தைகளை இழந்துள்ளனர். மிஷனெரி ராஜா எட்வின் மோசஸ் குடும்பம் அவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து ஜெபித்தனர். அதன்பின் பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் தேவன் பூரண ஆயுளை தந்ததால் 30 பேர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.
- திருமதி. ரேகா திருமணமான நாளிலிருந்து மூன்று வருடங்களாக தொடர் விக்கலினால் அவதிப்பட்டு வந்தார். பல மருத்துவர்களிடமும், மந்திரவாதிகளிடமும் சென்று குண மடையாத அவர் ஜெபத்திற்கு அழைத்து வரப்பட்டபோது தேவன் குணமாக்கினார்.
- விசுவாசியான திருமதி ராம் ஸ்வரூப், நஹர்காலனியின் முன்னாள் கிராமத் தலைவர். தன் வயலுக்கு சென்று கொண்டிருந்தபோது ஒரு நாகபாம்பு அவர்முன் படமெடுத்து நின்றது. உடல் பருமனான அவர் ஓட முடியாமல் பயத்தினால் கண்களை மூடி சத்தமாக தேவனிடம் ஜெபித்தார். அவர் கண்களைத் திறந்தபோது பாம்பு அமைதியாக நகர்வதைக் கண்டு தேவனைத் துதித்தார்.
- 35 வயதான விக்ரம் 5 பிள்ளைகளின் தகப்பன். அவரது மனைவி ஒரு விசுவாசி. காச நோயினால் மனநிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் மருத்துவரை அடித்துவிட்டதால் வீட்டிற்கு அனுப்பப்பட்டார். சபையார் விக்ரம்க்காக ஜெபித்தபோது தேவன் அவரை முழுமையாக குணப்படுத்தியதால் அநேகர் தேவனை விசுவாசித்தனர்.
- ரத்தியாவைச் சேர்ந்த குஷலேமா குடல்வால் வளர்ச்சியால் உடல்நிலை பாதிக்கப்பட்டதினால் அவரது கணவர் மன உளைச்சலுக்கு ஆளானார். அதோடு 12 வருடங்களாக குழந்தையில்லாத காரணத்தினால் குடும்பத்தில் சமாதானமின்றி தவித்தனர். இந்நிலையில் தொடர்ந்து சத்சங் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தபோது தேவன் குழந்தை பாக்கியம் அருளியதோடு நோயி லிருந்தும் குணப்படுத்தினார்.

## ஜெபியுங்கள்

ரத்தியா திருச்சபை மூப்பர்கள் ஒவ்வொரு வாரமும் கிராம ஊழியங்களில் ஈடுபட்டு வருகின்றனர். விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து வருகின்றனர். சிறுவர்களுக்கு சனிக்கிழமை களில் வேத வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில் 50 முதல் 70 சிறுவர்கள் பங்குபெறுகின்றனர். பெண்கள் கூட்டம் செவ்வாய் கிழமைகளிலும், உபவாச ஜெபம் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஞாயிறு ஆராதனையிலும் சுமார் 100க்கும் மேற் பட்டோர் கலந்து கொள்கிறார்கள். சுயாதீன போதகர்களின் இடையூறுகளினால் சில குடும்பங்கள் பின்வாங்கியுள்ளனர். தொடர்ந்து இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாச குடும்பங்களுக்காக ஜெபித்து கொள்ளுங்கள்.

# காலச் சுவடுகள்



## ஆலீஸ் ஜி. ப்ராயர்

(1938 - 2024)

1925-ம் ஆண்டு அமெரிக்கா தேசத்திலிருந்து இந்தியாவின் கடைக்கோடி பகுதியான நாகர்கோவிலுக்கு வந்த ரிச்சர்ட் ஹென்றி ப்ராயர், மிஷனெரி ஊழியத்துடன் கான்கார்டியா இறையியல் கல்லூரியில் போதித்தும் வந்தார். இவருக்கு இரண்டு இரட்டைப் பெண் குழந்தைகள் மற்றும் ஒரு மகன் இருந்த நிலையில் நான்காவது மகளாக ஆலீஸ் ஜி. ப்ராயர் 1938இல் நாகர்கோவிலில் பிறந்தார். குன்னூரிலும், ஊட்டியிலும் பள்ளிப் படிப்பை முடித்த ஆலீஸ் அமெரிக்கா சென்று மருத்துவம் பயின்று 1968-ம் ஆண்டு இந்தியா திரும்பினார்.

இவர் அமெரிக்காவின் மிசோரி சினாட் மிஷனெரி சொசைட்டி மூலம் பெண் மருத்துவராக தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாட்டின் திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள ஆம்பூரில் இந்திய சுவிசேஷ லுத்தரன் சபையின்கீழ் இயங்கிவந்த பெதஸ்தா மருத்துவமனையில் மருத்துவப்பணியில் இணைந்தார். அங்குள்ள கிராமங்களில் மக்கள் மிகவும் வறுமை மற்றும் மோசமான சுகாதார சூழ்நிலையில் வாழ்ந்து வந்தனர். இவர் ஏழை மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்கியதோடு, இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை கிராமத்தினருடன் பகிர்ந்து கொண்டும் இறக்கும் வரை மருத்துவ சேவையை செய்தும் வந்தார்.

ஆம்பூர் மற்றும் வானியம்பாடி பகுதிகளில் குழந்தைகள் நல பராமரிப்பில் கவனம் செலுத்தினார். போலியோ, தொழுநோய், காசநோய் மற்றும் காலரா ஆகியவற்றை ஒழிப்பதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். கோவிட்-19 நோய்க்கு முன்பு சமூக சேவையில் மிக தீவிரமாய் ஈடுபட்டு வந்த இவர் தொற்றுநோய் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தனது வீட்டில் வைத்து சிகிச்சை கொடுத்தார். இவ்வாறு குழந்தைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கினார். கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்துக் குறித்து

தேவையான வழிகாட்டுதலை வழங்கினார். அம்மைநோய், கக்குவான் இருமல், காலரா போன்ற நோய்கள் பரவும்போது தீவிர சிகிச்சை அளித்து மக்களை காப்பாற்றினார். தனிஒரு பெண்ணாக 60 கிராமங்களுக்கு மேலாக சென்று மருத்துவ சேவைச் செய்தார்.

## ஆம்பூரின் அன்னை தெரெசா

மிகவும் இரக்கம் கருணை நிறைந்த இவரின் அன்பைப் பெற்ற கிராம மக்கள் இவரை 'ஆம்பூரின் அன்னை தெரெசா' என்று அழைத்தனர். அதுமட்டுமின்றி திருமணமே செய்து கொள்ளாமல் ஏழை மக்களுக்கு பல்வேறு மருத்துவ உதவி வழங்கின இவரை, **'மிஸ்ஸியம்மா'** என்றும் அழைத்தனர். இவரது மருத்து சேவையைப் பாராட்டி பல்வேறு நிறுவனங்கள் இவருக்கு பல விருதுகளை வழங்கி கௌரவப்படுத்தியுள்ளனர். நோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு, குழந்தை நல பாதுகாப்பு இவற்றுக்காக வாதிட்டவர். பயிற்சி பெறாத மருத்துவர்கள் மற்றும் மருத்துவச்சிகளால் ஏற்படும் ஆபத்துகளை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு அளித்தார். இவர் பச்சிளம் குழந்தை, பிரசவத்தின் பிந்திய பராமரிப்பு மற்றும் தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார். ஆரம்பத்தில் சமுதாயத்தில் அவநம்பிக்கை மற்றும் தயக்கத்தை சந்தித்தாலும் விடாமுயற்சியுடன் 60 ஆண்டுகளுக்கு மேலாக அர்ப்பணிப்போடு பணி செய்தார். இவர் கிராமங்களுக்கு தனது ஜீப்பை ஓட்டி செல்வதைப் பார்த்தாலே நோய் உண்டாக்கும் தீயசக்திகள் ஓடிவிடும் என உள்ளூர் வாசிகள் நம்பினர்.

அவரது இரக்கம் மக்களைத் தாண்டி பறவைகளையும், மிருகங்களையும் நேசிக்கவைத்தது. ஒருமுறை ஒரு நாடோடி அவருக்கு மயிலையும், மயில் முட்டைகளையும் வழங்கினான். அம்முட்டைகளை தன் கோழி முட்டைகளோடு வைத்து குஞ்சு பொறிக்க செய்தார். அம்மயிலுக்கு இந்துமதி என்று பெயரிட்டார். நாய்களின் கூட்டத்தை நேசித்து ஒவ்வொன்றுக்கும் பெயர் சூட்டி அன்புடன் பராமரித்தார்.

## இறுதிநாட்கள்

2003இல் தனது 75-வது வயதில் ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து மருத்துவ மனையில் பகுதி நேர சேவை செய்து வந்தார். தனது 86-வது வயதில் உடல்நல குறைவு ஏற்பட்டு வேலூரிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வந்த நிலையில் 2024, செப்டம்பர் 30-ம் தேதி அதிகாலை தேவனுடைய ராஜ்யம் சென்றடைந்தார். அவரது மரண செய்தியைக் கேட்டதும் ஆம்பூர் நகரம் சோகத்தில் மூழ்கியது. பல இடங்களில் போஸ்டர் ஒட்டியும், ஆலீஸ் ஜி. ப்ராயர் உருவபடத்திற்கு மெழுகுவர்த்தி ஏற்றி வைத்தும் மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். அமெரிக்காவில் வசிக்கும் அவரது குடும்பத்தினர் வந்த பின் அக்டோபர் 3ஆம் தேதி ஆம்பூரிலுள்ள பெதஸ்தா மருத்தவமனை வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது அன்பு, நம்பிக்கை, சேவை மக்களால் போற்றப்பட்டு வருகிறது. 1972 முதல் 1974 வரை அலீஸுடன் பணிபுரிந்த எமிலின் சந்திரா தனது இரங்கல் செய்தியில் "ஆலீஸ், ஓர் அழகிய தெய்வீக வாழ்க்கையை வாழ்ந்தார். ஏழைகள், குழந்தைகள், நோயாளிகள் மற்றும் இறக்கும் நபர்களுக்கும் சேவை செய்தார்." என்று விவரித்துள்ளார்.

# ஆலயப் பிரதிஷ்டைகள்



கர்த்தருடைய பெரிதான கிருபை யினால் 13 பேர் கொண்ட குழுவாக அசாம் மாநிலத்திற்குச் சென்று அங்கு ஊழியம் செய்யும் அனைத்து மிஷனெரிகளையும் சந்தித்து, உற்சாகப்படுத்தி அவர்களுடன் இணைந்து ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். ஜோனை பணித்தளத்தி லுள்ள ரகுட்கோக்கே கிராமத்தில் மதுரையைச் சேர்ந்த திரு. ஜான் தனராஜ் குடும்பம், அமுதா ரோஸ்லின், பிள்ளைகள் திருமதி. காருண்யா ராயல் குடும்பம், திருமதி. எமிமா ஜூலியன் குடும்பம் சார்பில் கட்டப்பட்ட ஆலயம் 15.09.2024 அன்று தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆலயம் கட்ட விசுவாசி திரு. ராகேஷ் பெகு தன் நிலத்தை இலவசமாகக் கொடுத்திருந்தார். பிரதிஷ்டையில் சுமார் 80 பேர் கலந்துகொண்டு தேவனை மகிமைப் படுத்தினர். பிரதிஷ்டை ஏற்பாடுகளை மிஷனெரிகள் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தனர்.

**திரு. ஐசக் தனசிங்,**
முன்னேற்றப்பணி செயலர் - மதுரை




ஆண்டவரின் பெரிதான கிருபையால் 6.10.2024 அன்று சத்தீஸ்கர் மாநிலம் பத்தல்கான் பணித்தளத்தி லுள்ள பாஹனதாகர் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் திரித்துவ ஆலயத்தை மறைதிரு. பாலமுருகன் அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள். இந்த ஆலயம் அமெரிக்கா ஐக்கிய நாட்டில் பணிபுரியும் திரு. கிஷோர் மாசிலாமணி அவர்களின் குடும்பத்தினர் சார்பில் கட்டி கொடுக்கப்பட்டது. திரு. கிஷோர் மாசிலாமணி அவர்கள் ஆலயத்தை திறந்து வைத்தார்கள். திரு. அரசசிங் சாலமோன் அவர்கள் (சென்னை) திரித்துவ ஆலய கல்வெட்டை திறந்து வைத்தார்கள். ஆலயம் நிரம்பி வழிய விசுவாசிகள் கூடி தேவனை மகிமைப்படுத்தி துதித்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. M. யோகராஜ்,** விரிவுப்பணி செயலர் - அம்பத்தூர்.

# 1
## பிப்ரவரி

சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பெஞ்சமின் ஜோதி
திரு. ஆரோன்சிங் நர்சாரி, திரு. சங்கர் M.
திருமதி. காந்தி தேவி சிவ்சங்கர்

## ஜம்மு

### சம்பா: அய்யனார் டேவிட் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** மூன்று கிராமங்களில் நடைபெற்ற சுவிசேஷ ஊழியத்தின் மூலம் சுமார் 750 பேர் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிந்துகொண்டனர். பஞ்த்தாலா மற்றும் ராயர்பூர் கிராமங்களைச் சேர்ந்த புதிய குடும்பங்களும், ரக்கா கிராமத்தில் குடியேறியவர்களும் நற்செய்திக்கு ஆர்வம்காட்டி வருகின்றனர். கூட்டக் கிராமத்தில் சிவகுமார், ரீட்டா, அனு, சோனியா ஆகியோரை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலையாக்கினார். பெண்கள் ஜெபக்குழுவிலும், வேதபாட வகுப்புகளிலும் அநேகர் தொடர்ந்து பங்குபெற்று வருகின்றனர். கூட்டக் மற்றும் சக்மாங்கா பகுதிகளிலுள்ள சபை மூப்பர்கள் நற்செய்திப் பணியில் உற்சாகத்துடன் உதவி செய்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹிராநகர், கக்வால், பொங்வால், ராஜ்புரா, சம்பா மாவட்டத்தின் அருகிலுள்ள கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை தேவன் தந்து, அநேகர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்ட; மஹாஷா, ராஜ்புத், ராம்தாசி ஆகிய இன மக்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கூட்டக் கிராமத்தில் ஞாயிறு ஆராதனையைத் தடைசெய்வோரையும், சம்பா பகுதியில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்போரையும் தேவன் சந்திக்க; பஞ்த்தாலா கிராமத்தைச் சேர்ந்த புதிய தொடர்பாளர்கள் தேவனுடைய விசுவாசத்தில் வளர; பிறவி ஊமையான காஞ்சன், அசுத்தாவியின் பிடியிலிருந்து சோனியா ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவித்திட கிராமத் தலைவர்களின் அனுமதி கிடைக்க; மிஷனெரியின் தாயார் எஸ்தர் மார்பக புற்றுநோயிலிருந்து பூரண சுகம்பெற ஜெபிப்போம்.

### ஆர்.எஸ். புரா: லுன்ஜாலால் ஹாக்கிப் & மேரி நெங்னெய்கிம்

**துதிக்க:** ஜிண்டால் கிராமத்தில் ஞாயிறு ஆராதனை நடத்த பாபி குமார் என்பவர் தனது வீட்டை திறந்து தந்துள்ளார். ஜிண்டால் கிராமத்தில் நான்கு குடும்பங்களும், சக்ரானி கிராமத்தில் ஒரு குடும்பமும் விசுவாசத் திற்குள் வந்துள்ளனர். அகார்சக் மற்றும் குலியன் கிராமங்களில் கிறிஸ்துமஸ் கீத ஆராதனையில் விசுவாசியல்லாத அநேகர் பார்வையாளர்களாக வந்திருந்தனர்; அவர்களுக்கு இயேசு பிறப்பின் நற்செய்தி அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆர்.எஸ். புரா கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் மற்றும் கிராமத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்க; குலியன் கிராமத்தில் விசுவாசத்திலிருந்து பின்வாங்கியுள்ள பிரசாந்த், காந்தி, சஹில், விஜய், பிரியா, ஜானு ஆகியோர் மீண்டும் விசுவாசத் திற்குள் வர; விசுவாச வாலிபர்களான நேஹா, ரியா, தானு, சோபா, ராம், சுனிதா ஆகியோர் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் வாழ; குடும்பப் பிரச்சனையின் நிமித்தம் ஆலய ஆராதனையில் பங்குபெறாமலிருக்கும் தாலுசக் கிராமத்தைச் சேர்ந்த ஜக்தீஸ்பாயின் குடும்பப்பிரச்சனையில் தேவன் சமாதானம் அருளி அவர்கள் மீண்டும் ஆராதனையில் பங்குபெற ஜெபிப்போம்.

## 2
## பிப்ரவரி

ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. வசந்தராணி ஜார்ஜ்
திருமதி. ரோஷிலா மொசாஹரி
திருமதி. ஜாய்ஸ் ஷோபனா பொன் அகஸ்டின்
திரு. மர்கூஸ் மால்தோ R.
திருமதி. மணினி பெபர்த்தா அஸ்தாபன்
திரு. ஜோசப் கிருபாகரன் S.

# ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளை தடைசெய்ய வேண்டுமென்ற எதிர்ப்பாளர்களின் திட்டங்களை தேவன் முறியடித்து 4 இடங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் ஆசீர்வாதமாய் நடைபெற தேவன் உதவி செய்தார். 11 கிராமங்களில் இரவு கூட்டங்கள், திரைப்பட ஊழியம் மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மூலம் சுமார் 803 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மூன்று பேர் தேவனின் மந்தையில் இணைந்துள்ளனர். சுதேச ஊழியர் கும்தாஸை நெஞ்சு வலியிலிருந்து தேவன் சுகமாக்கினார். 5 இடங்களில் நடைபெற்ற வேதாகமத் தேர்வில் விசுவாசிகள் வாஞ்சையோடு பங்குபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளை தவறான வழியில் நடத்தும் சத்தி தேவி மற்றும் அவரது கணவர் சேத்ராம் தங்கள் தீயவழியைவிட்டு மனந்திரும்ப; கஷாபாத் கிராமத்தில் ஆலயம் கட்ட எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; குடிப்பழக்கத்திலிருந்து ரத்தன், தேஜ்ராஜ், பாவ்தீப் ஆகியோரை தேவன் விடுவிக்க; சந்தோஷ் மற்றும் மீனா ராம் விசுவாசத்தில் வளர; சுவிசேஷ ஊழியத்திற்கு அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; நமது திருச்சபை வாலிபர்கள் தங்கள் குடும்பம் மற்றும் திருச்சபையின் ஒழுக்கத்திற்கு அடிபணிந்து நடக்கவும், ஆவிக்குரிய கூட்டங்களில் உற்சாகத்துடன் கலந்து கொள்ளவும் ஜெபிப்போம்.

### கர்சோக்:
### பவன் குமார் & பிரபாஷினி தேவி

**துதிக்க:** பசந்த்பூர் மற்றும் பால்யாட் கிராமங்களில் தடையின்றி கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளை நடத்த தேவன் கிருபை செய்தார். கிறிஸ்துமஸ்க்கு இரண்டு நாட்களுக்கு முன்பு பலத்த மழை பெய்தது. ஜெபத்தின் மூலம் கிறிஸ்துமஸ் அன்று சாதகமான காலசூழ்நிலையை தேவன் ஏற்படுத்தித்தந்தார். 13 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்று நோயின் நான்காவது கட்டத்திலுள்ள நானக் சந்து ஒருமாதம் மட்டுமே உயிருடன் வாழ்வார் என மருத்துவர்கள் அறிவித்த நிலையில் ஜெபத்தின் மூலம் நான்கு மாதங்கள் கடந்துவிட்டதற்காக தேவனைத் துதித்து, அவர் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம். பசந்த்பூரைச் சேர்ந்த மீரா மீண்டும் விசுவாசத்திற்குள் வர; திரளான சுதேச ஊழியர்களை தேவன் இப்பகுதியில் எழுப்பித் தரவும், அநேக ஆத்துமாக்கள் தேவ ராஜ்யத்தில் சேர்க்கப்படவும் ஜெபிப்போம்.

## 3 பிப்ரவரி

திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. முருகம்மாள் எஸ்தர் ஆல்பர்ட்

### ஆனி: ஜின் சாவ்ம் & சிங் ஹோய்கிம்

**துதிக்க:** எவ்வித இடையூறுமின்றி கிறிஸ்துமஸ் பண்டிகையை சிறப்பாக கொண்டாட தேவன் கிருபை செய்தார். சுமார் 250 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சாலை விபத்திலிருந்து தேவன் ஊழியரைப் பாதுகாத்தார். புதிதாக மம்தா, பிரேமா ஆகியோர் ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். மன அழுத்தத்திலிருந்து மானிஷ்-க்கு தேவன் சுகமருளினார். எவ்வித நிர்ப்பந்தமுமின்றி கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட நீதிமன்றம் அனுமதி தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வினிதாவின் இரத்த ஓட்டத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சனையிலிருந்து வினிதா சுகம்பெற; புதிய தொடர்பாளரான மம்தா மற்றும் விஜயின் குடும்பப்பிரச்சனையை நீக்கி தேவன் சமாதானம் அருள; பந்தல் பகுதியில் நடைபெறும் எதிர்பாரா மரணங்கள் தேவனால் தடுக்கப்பட்டு, ஜனங்கள் கர்த்தரை விசுவாசிக்க; ஏழு வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் பிரேமா தேவிக்கு தேவன் கர்ப்பத்தின் கனியை அருள; சிம்லால், மோன்லால், பிரலால், தேவ் மணி, சிவராம் ஆகியோரின் குடும்பத்தினர் தேவனை முழுமனதோடு விசுவாசிக்க ஜெபிப்போம்.

### ரோஹ்ரு:

**ஜாண்சன் சங்கர் & ஜெபராணி**

**துதிக்க:** ஜீப் குழு ஊழியத்தின் மூலம் 12 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். டைலான் தேவியை டயாலிஸிஸ் செய்யும்படி மருத்துவர்கள் அறிவுறுத்திய போதிலும் தனது ஊக்கமான ஜெபத்தினால் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து சுகம் பெற்றார். நடக்க முடியாமலிருந்த ரோஷாலாலை தேவன் குணப்படுத்தி நடக்கும்படி கிருபை செய்தார். இருசக்கர விபத்திலிருந்து ரஞ்சீஷ்-ஐ தேவன் பாதுகாத்தார். 75 வயது நார்மி என்ற முதியவருக்கு தேவன் அருளிய சுகத்தின் மூலம் அவரது குடும்பம் தேவனை விசுவாசிப்பதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்து அகன்ஷா மற்றும் கல்பனாவுக்கு தேவன் விடுதலைதர; வயிற்று கட்டியினால் அவதியுறும் நியாரு ராமுக்கு தேவன் பூரண சுகமருள; கிஷ்ணு, ஜக்தா, அரகோட், தாரா, சத்தா சராஜ், தேவ்லி ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை கட்டளையிட; தல்கோன் கிராமத்தில், மூடப்பழக்க சடங்காச்சாரங்களுக்கு அதிக பணத்தை செலவழித்து வரும் ரோஹ்ரூ இன மக்கள் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

# 4
## பிப்ரவரி

செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜெபக்குமார் பெரியசாமி

### நேர்வா: எஸ். இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** எதிர்ப்புகள் மத்தியிலும் தேவன் தமது கிருபை மற்றும் ஆசீர்வாதங்களை இப்பணித்தளத்திற்கு தந்துள்ளார். பரனு மற்றும் பங்கால் கிராமங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் ஆராதனையில் புதிதாக அநேகர் கலந்துகொண்டதோடு, அவர்கள் ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்வதாகவும் உறுதி அளித்துள்ளனர். குப்வி பகுதியில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் தேவன் தந்துள்ள புதிய தொடர்பாளர்களுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகளின் மத்தியிலும் விசுவாசிகள் தைரியமாகவும், விசுவாசத்தில் உறுதியாகவும் நிலைத்திருந்து தொடர்ந்து ஆலய ஆராதனையில் பங்குபெற; பரனு, பங்கால் மற்றும் அடல் சபைகளின் மறுசீரமைப்பு மற்றும் மறுமலர்ச்சிக்காக; விசுவாசிகள் தவறான போதனைகளுக்கு செவிசாய்க்காமல் வேத வசனங்களை ஆழமாய் புரிந்துகொள்ள; விமலா மற்றும் பிப்லாவுக்கு தேவன் சுகப்பிரசவத்தை அருள ஜெபிப்போம்.

### தானேதார்: ஜெபர்சன் &காயத்ரி

**துதிக்க:** எட்டு கிராமங்களில் கிறிஸ்துமஸ் கீத பவனி சென்று கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை பாடல்கள் மற்றும் வசனங்கள் மூலம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். கடுங்குளிரிலும் சபை விசுவாசிகள் உற்சாகத்துடன் கிறிஸ்துமஸ் ஆராதனையில் பங்குப் பெற்றனர். மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டனர். வாலிபர்களுக்கான சிறப்பு கூடுகை நடத்த தேவன் உதவி செய்தார். குமர்சைன் கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி மஞ்சுவுக்கு பேக்கரி கடை திறக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தியினால் புதிதாக சந்திக்கப்பட்டுள்ள ஜால்டி கிராமத்தில் தேவன் மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருக்கும் கபில் குடும்பம் மீண்டும் தேவனோடுள்ள ஐக்கியத்தில் பெலப்பட; இங்கு குளிர் காலத்தில்தான் விடுமுறை வேதாகப்பள்ளி நடத்தப்படும். எனவே வி.பி.எஸ். நடத்த ஏற்ற இடம், வசதிகள் மற்றும் கிராமத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்க ஜெபிப்போம்.

### மந்திரம் பொய் இயேசுவே மெய்

*ஜார்கண்ட், தெலோ பணித்தளத்திலுள்ள துளியானி கிராமத்தில் ஹபு கிஸ்கு என்ற மந்திரவாதி வசித்து வந்தார். ஒருநாள் நமது விசுவாசியான லூகாஸ் மராண்டியின் வீட்டில் பூஜை செய்யும்படி வந்திருந்தார். லூகாஸ் அவரை பூஜை செய்யவிடாமல் தடுத்ததோடு, வாசலில் வைக்கப்பட்ட வேதாகமத்தை வாசித்துவிட்டு பின்னர் தன்வீட்டிற்குள் நுழையும்படி கூறினார். மந்திரவாதி பயந்து, பூஜை செய்து பலிகொடுக்க கொண்டு வந்திருந்த இரண்டு புறாக்களையும் அவரது வீட்டு வாசலில் வைத்துவிட்டு, இந்த வீட்டில் யாராவது ஒருவர் மரணமடைவார் என்று ஊராரிடம் கூறிச்சென்றார். இரண்டாவது நாளில் புறாக்கள் இறந்துவிட்டன. ஆனால் தேவனுடைய கிருபையால் லூகாஸ் குடும்பத்தினருக்கு எந்த ஒரு ஆபத்துமின்றி தேவன் பாதுகாத்தார். மந்திரவாதியின் வார்த்தை பொய்யானதைக் கண்டு ஊரார் ஆச்சரியப்பட்டு, கிறிஸ்தவர்களின் தேவன் மெய்யான தெய்வமென்று கூறி தேவனை மகிமைப்படுத்தினர். அல்லேலூயா!*

# 5
# பிப்ரவரி

புதன் *உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அற்புதம் செல்வி விஜய்
திரு. தெய்வநாயகம் சாமுவேல்
திருமதி. அனுகாமி எக்கா ஜாஹர் சாய்

## பஞ்சாப்

### ஜைத்தோ:

### சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். சுமார் 1260 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பஷாக்கானா மற்றும் ஜைத்தோ ஆலயங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளில் சுமார் 540 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். சரோஜின் இருதயத்திலிருந்த ஓட்டையை தேவன் அற்புதமாய் சுகமாக்கினார். விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியிருந்த அஜித்கில் மற்றும் புர்ஷாத்ராட் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். ராஜ், ஹர்ஷ் சிங், ஹர்மோன்சிங், லவ்பிரீத் சிங் ஆகியோரின் குடும்பத்தினர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்த மாயிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பிக்கர் சிங், குல்ஜிந்தர் சிங், மீனு கௌர், கரம்ஜித் கௌர், கைவல்சிங், நரேஷ் குமார், சஞ்சயா குமார் ஆகியோர் மனந்திரும்பி இயேசுவின் அன்பை அறிந்துகொள்ள; பசாக்கானா பகுதியில் தடைப்பட்டுள்ள ஜெபக்குழுக்கள் மீண்டும் துவங்கப்பட; பிரம்ஜித், ராஜீவ், ஜஷ்வந்த், பிரேம் ஆகியோரை குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுவிக்க; வரும் நாட்களில் செய்யப்படவிருக்கும் ஊழியங்கள் மூலம் அநேகர் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; விஷால் குமார் மற்றும் சுரேந்திர குமார் தேவனுக்கு உத்தமமாய் ஊழியம் செய்ய பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்காக ஜெபிப்போம்.

### மான்சா:

### தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** சத்சங், இயேசு திரைப்பட ஊழியம் மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் சுமார் 1680 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஜுன்ஹீர் கிராமத்தில் ஒருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நிக்காசிங்கின் குடும்பத்தினர் ஆலயம் வர ஆரம்பித்துள்ளனர். ஐந்து ஆண்டுகளாக விசாரனை நடைபெற்று வந்த நமது சபை மூப்பர் சுர்தீப் சிங்கின் வழக்கில் நீதியான தீர்ப்பு கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நந்த்கர், பஜாவாலா, கெஞ்சியா ஆகிய இடங்களில் நடைபெற்ற சத்சங் மூலம் சுவிசேஷம் கேட்டோர் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நீரிழிவு நோயினால் மரித்துப்போன ஜஸ்பால் சிங்கின் குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதல் தர; பெலவீனத்தினிமித்தம் அரசாங்க வேலைக்கு செல்லமுடியாத நிலையிலுள்ள நமது விசுவாசியும் மாற்றுத் திறனாளியுமான ஜென்னி கௌரை அவரது கணவர் விவாகரத்து செய்யவுள்ளார். தேவன் அவரது உள்ளத்தில் கிரியை செய்ய; இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோர் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி பெற; மிஷனெரி மன்னாசிங்கின் சுகப்பிரசவத் திற்காக ஜெபிப்போம்.

# 6
## பிப்ரவரி

வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பெட்ரீசியா தமிழ் செல்வி குமார்
திரு. ஹமோம் நாபா சிங்

### அஹ்மத்கட் மண்டி:
**கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா**

**துதிக்க:** ஐந்து இடங்களில் நடைபெற்ற சத்சங் கூடுகை, இரண்டு வெளிப்புற சந்திப்பு ஊழியம், 10 இடங்களில் கிறிஸ்துமஸ் பவனி ஆகியவை மூலம் சுமார் 1200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். 10 ஆண்டுகளுக்கு மேலாக பித்தப்பை மற்றும் சிறுநீரகக் கல் பிரச்சனையில் அவதியுற்ற கமல்ஜீத் கௌர் மற்றும் ஜாஷனுக்கு தேவன் சுகமருளினார். ரோஹிரா சபையில் நடத்தப்படும் பெண்கள் ஜெபக்கூடுகை தடையின்றி தொடர்ந்து நடைபெற தேவன் உதவி செய்தார். ஞாயிறு பள்ளியில் தொடர்ந்து பங்குபெற்று வரும் கிறிஸ்தவரல்லாத 15 சிறுவர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆறு வருடங்களுக்கு மேலாக படுக்கையிலிருக்கும் சோட்டிலாலின் மாமியாரை தேவன் குணப்படுத்த; விசுவாசிகள் மத்தியில் காணப்படும் கருத்துவேறுபாடுகள் நீங்கி, அவர்கள் புதிய விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் ஜீவிக்க; ஜண்டாலி கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; தாலோர் பகுதியில் தடையின்றி ஆராதனை நடத்தப்பட; நமது திருச்சபையின் வாலிபர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் அருளிச்செய்ய ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### பாஸ்பூர்:
**கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்**

**துதிக்க:** சுமார் 340 பேர் முதன் முறையாக இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொண்டனர். 18 கிராமங்களில் பின்தொடர்பணி தடையின்றி நடைபெற்றது. 15 புதிய ஏற்பாடுகளும், 4 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. நம்முனாதோரி கிராமத்தில் புதிய ஆராதனைக்குழு துவங்கப்பட்டுள்ளது. குல்சேர்சிங் நெஞ்சு வலியிலிருந்தும், ஷோஹினி காச நோயிலிருந்தும், சுக்வந்தர் கௌர் மனநோயிலிருந்தும் ஜெபத்தினால் சுகம் பெற்றனர். மோனிகாவின் கணவரை குடியின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுவித்தார். மதவாதிகள் மற்றும் சமூக விரோத சக்திகளிடமிருந்து நமது விசுவாசிகளை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக் கல் மற்றும் மஞ்சள் காமாலை நோயிலிருந்து சௌரோஜ், நாய் கடியிலிருந்து ஷ்ரிஸ்டி, கண் பிரச்சனையிலிருந்து தானு, காது பிரச்சனையிலிருந்து பப்லு ஆகியோரை தேவன் குணப்படுத்த; கர்ப்பப்பை அறுவை சிகிச்சை செய்துள்ள ரேஷ்மாவுக்கு தேவன் புதிய பெலனைத் தர; வயிற்றில் நீர்க்கட்டியால் பாதிக்கப்பட்டுள்ள சுக்விந்தர் கௌர் சுகம்பெற; போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் முதியோர் கல்வி திட்டம் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## 7
## பிப்ரவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. துரைசாமி K. ஃபிரான்சிஸ்
திரு. பிரசாந்த் மீசாலா
திருமதி. பத்மாவதி நாராயண நாயக்
திருமதி. தனபுஷ்பம் அருள்ராஜ்
திருமதி. ஹெலன் மரியம் R. அரவிந்த்

### நானக்மட்டா:
**ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்**

**துதிக்க:** எட்டு இடங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியின் மூலம் சுமார் 320 பேர் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்துகொள்ளும் பாக்கியம் பெற்றனர். ஏழு ஆண்டுகளுக்கு மேலாய் மன அழுத்தத்தினால் கஷ்டப்பட்ட பச்சேகாடா கிராமத்தைச் சேர்ந்த லவ்ஜோட்-க்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். பல்வேறு நோய்களினால் பாதிக்கப் பட்டிருந்த நமது சபை மூப்பர் சத்விந்தர் சிங்க்கு தேவன் சுகமருளி கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளை நல்ல முறையில் நடத்திட தேவன் கிருபை செய்தார். குடியின் அடிமைத்தனத்திலிருந்து ராம் பிரவாஷை தேவன் விடுவித்தார். தேவனு டைய வார்த்தையின் மூலம் தற்கொலை எண்ணத்திலிருந்து விமல் குமாருக்கு விடுதலை அளித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10 ஆண்டுகளுக்கு மேலாய் பிசாசின் பிடியினால் துன்புறும் பாவனாவுக்கு தேவன் விடுதலை தர; சஸ்ஸயனேவேதா கிராமத்தைச் சேர்ந்த ஜிந்தேர் மற்றும் ஹர்தாஸ்பூர் கிராமத்தைச் சேர்ந்த சரவணன் ஆகியோரை மனநோயிலிருந்து தேவன் குணப்படுத்த; பல்கார்சிங் குடிப்பழக்கத்தி லிருந்து விடுதலை பெற; சுவாச கோளாறிலிருந்து திர்லோக்சிங் சுகம் பெற ஜெபிப்போம்.

## ஹரியானா
### ஃபத்தேஹ்பாத்:
**டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்**

**துதிக்க:** கிறிஸ்துமஸ் காலத்தில் சுமார் 2300 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையில் இணைந்துள்ளனர். 28 கிராமங்களில் கிறிஸ்துமஸ் பவனி சிறப்பாக நடைபெற்றது. ஃபதேபாத் பணித்தளத்தில் எவ்வித தடையுமின்றி சாலையில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்த தேவன் உதவி செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழிய விரிவாக்கம் செய்ய பயிற்சி பெற்ற சபை மூப்பர்களான அனோஜ் குமார், ஆஷாராம், தேவிலால், விஜய், சன்ஷார்சந்த், ரஜினி, சுனில், பூப், பல்கார், மன்பிரீத் ஆகியோரை தேவன் ஊழியத்தில் வல்லமையாய் எடுத்து பயன்படுத்த; பக்கவாதத்தினால் சரீரத்தில் ஒரு பக்கம் பாதிக்கப்பட்டுள்ள ஷன்சார் சந்த்-க்கு தேவன் பரிபூரண சுகம்தர; அசோக் நகர் ஆலய நிலத் திற்கு சர்வே எண் விரைவில் கிடைக்க; திங்மண்டி, பாட்லிடபார், தரியாபூர் கிராமங்களிலுள்ள நமது விசுவாசிகள் ஆத்தும ஆதாயப்பணியில் தீவிரமாய் ஈடுபட ஜெபிப்போம்.

# 8
## பிப்ரவரி

சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சிபி செல்வின் சாம்
திருமதி. கவித் சுனிதாபேன் ரஷ்யாபாய்
திருமதி. ரேகா சாம்பியா

### கலான்வாலி:
**விஜயகுமார் & ஜெபலா**

**துதிக்க:** புதிய கிராமம் ஒன்றில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கலான்வாலி, ஓதான், அசேர் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சுமார் 1600 பேரில் சுமார் 1250 பேர் முதன்முறையாக கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியைக் கேட்க தேவன் கிருபை செய்தார். வேதாகமப் போட்டியில் 40 பேர் கலந்துகொண்டனர். டப்பி கிராமத்தைச் சேர்ந்த தர்மேந்திரருக்கு குடிப்பழக்கத்திலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள; எழு வருடங்களாக வலிப்பு நோயினால் கஷ்டப்படும் ஜலாலானா கிராமத்தைச் சேர்ந்த 22 வயது நவ்தீபை தேவன் குணப்படுத்த; இவ்வருடத்தில் திட்டமிட்டுள்ள அனைத்து ஊழியங்களும் எவ்வித தடையுமின்றி நடைபெற; விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் பெலனடைந்து ஆத்தும ஆதாயப் பணியில் உற்சாகத்துடன் ஈடுபட ஜெபிப்போம்.

## ராஜஸ்தான்
### உதய்பூர்:
**ஆஷிஷ் குமார் & சவிதா தேவி**

**துதிக்க:** ஆறு கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் சுமார் 700 பேருக்கு முதன்முறையாக நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழு பேர் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். பழங்குடியினர் வசிக்கும் ஜஞ்சர் கிராமத்தில் ஆராதனை நடத்த தேவன் திறந்த வாசலை அருளினார். பிரேமிபாய், ரேஷ்மிபாய், சந்தியா, ராஜ்தீப், நரேஷ் ஆகியோரை அசுத்தாவியின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுவித்தார். நமிஷா மற்றும் அருணாவுக்கு குழந்தை பாக்கியம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பலாசியா மற்றும் கோகுண்டா பகுதிகளில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; நடைபெறவுள்ள கிராம பஞ்சாயத்துத் தேர்தலில் ஊழியத்திற்கு சாதகமான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட; அசுத்தாவியின் தாக்குதலிலிருந்து விசுவாசிகள் பாதுகாக்கப்பட்டு, தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள 3 வயது ஈவான் என்ற சிறுவனுக்கு தேவன் சுகம்தர; உபத்திரவத்தினிமித்தம் விசுவாசத்தைவிட்டுப் பின்வாங்கியுள்ள நலாபலா & சோட்டானாலா ஆகிய ஆராதனைக்குழுக்களைச் சேர்ந்த சில விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

# 9 பிப்ரவரி

ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெசிந்த் ஜோவன்னா ராமமுனி பிரசாத்
திருமதி. தீனா குமாரி பெபர்த்தா ஆஷாபிராப்தா
திருமதி. துர்கா தேவி @ ரூத் மேரி சங்கர் A.

## ஹனுமான்கட்:

### முதவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** 24 இடங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளில் புதியவர்கள் உட்பட சுமார் 400 பேர் கலந்து கொண்டனர். மன்க்சாரைச் சேர்ந்த ஒருவர் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட்டு சபையில் இணைந்துள்ளார். சாலை விபத்திலிருந்து பிரம்ஜீத்தை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். குஞ்சா கிராமத்தைச் சேர்ந்த சுனிதாவை கடுமையான வயிற்று வலியிலிருந்து தேவன் குணப்படுத்தினார். சுரேஷா கிராமத்தைச் சேர்ந்த ககன் கௌர்க்கு புத்திர பாக்கியம் அருளிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த இரண்டு வருடங்களாக மன அழுத்தத்தினால் கஷ்டப்படும் ஜஸ்விந்தர் கௌருக்கு தேவன் பூரண சுகமருள; ஆறு மாதங்களாக நுரையீரல் தொற்றினால் அவதியுறும் ரேணு கௌர் சுகம்பெற; தனது கடனை அடைக்க தனது சொத்துக்களை விற்கவிருக்கும் ஷியாம் கௌருக்கு தேவன் சரியான வழியைக்காட்ட; உடல் முழுவதும் கட்டிகளினால் பாதிக்கப்பட்டுள்ள கரம்ஜீத் கௌர்க்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

## கேர்வாடா:

### கெனோஸ் ஸ்டான்லி இன்பராஜ் & சாந்தினி, தேபாஷிஸ் ஹெம்ரோம் & ஷிஃபாலி ஹன்ஸ்தா

**துதிக்க:** போகாரா கிராமத்தைச் சேர்ந்த ஐந்து குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஒன்பது கிராமங்களில் சுமார் 390 பேர் முதன் முறையாக இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். பருடி கிராமத்தைச் சேர்ந்த ரீட்டா கட்டாராவுக்கு பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுதலை அருளினார். பேசயியலாமலிருந்த நான்கு வயது விக்கி ஜெபத்தின் மூலம் பேசும் திறனைப் பெற்றான். கிறிஸ்தவ விசுவாசத்தினிமித்தம் கிராமத்தினரால் ஒதுக்கி வைக்கப்பட்ட காலாபூர் கிராமத்தைச் சேர்ந்த பாபுவை கிராமத்தினர் மீண்டும் ஏற்றுக்கொண்டுள்ளனர். லக்ஷ்மன் ஜெபத்தின் மூலம் தெளிவான கண்பார்வை பெற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹேமா பெனுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; காச நோயிலிருந்து ஓம் பிரகாஷ், மனநோயிலிருந்து கஞ்சன், கண்பார்வை பிரச்சனையிலிருந்து ஜோதி கட்டாரா ஆகியோருக்கு தேவன் சுகமருள; அசோக், பிரகாஷ், ரமேஷ், ஹிடேஷ், மஞ்சு, ஹக்ரா, கவிபென் ஆகியோரை குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுதலை செய்ய; கோடியகுன் கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி கட்டாரி அமராவின் வீட்டை சேதப்படுத்திய மத தீவிரவாதிகள் மனந்திரும்பவும், நமது விசுவாசியை தேவன் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

# 10
## பிப்ரவரி

திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சாலமோன் A.

செல்வி. இபலாலே பமே

### அஜீத்கார்:

**ஜெய்பீர் சிங் & தேவி ராணி**

**துதிக்க:** அமர்சர், கெரோட்டி மற்றும் ஜகதீஷ்புரா ஆகிய கிராமங்களில் சுமார் 650 பேர் கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டனர். 300 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. நடைபெற்ற அனைத்து கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளிலும் சுபாஷ் என்ற விசுவாசி பெரிதும் உதவி செய்தார். கடுமை யான நெஞ்சுவலியினால் கஷ்டப்பட்ட வித்யாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். மூன்று ஆண்டுகள் தொடர் ஜெபத்தின் விளைவாக ரேஷ்மா வின் சகோதரன் முதன்முறையாக கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூன்று கிராமங்களில் சுவிசேஷத்தைக் கேட்ட மக்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க; பிரசாந்த் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள, சந்தீப்புக்கு நல்ல வேலையும், கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையும் கிடைக்க; விசுவாசியான கஸ்தூரியை கொடுமைப்படுத்துவதோடு ஆலயம் செல்வதை தடைசெய்யும் அவரது கணவர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## டெல்லி

### பட்பர்கன்ஜ்:

**ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்**

**துதிக்க:** எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளை சந்தித்து கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தவும், பரிசுகள் வழங்கவும் தேவன் கிருபை செய்தார். நோய்டாவில் செக்டர் 82, சுரஜ்புர் போன்ற சபைகள் இல்லாத இடங்களுக்குச் சென்று கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிவிக்கவும், திரளான மக்களுடன் சி.ஆர்.பி.எஃப். வீரர்களும் நற்செய்தியைக் கேட்கவும் தேவன் உதவி செய்தார்; இந்நிகழ்ச்சிகளில் வாலிபர்கள் தன்னார்வமாக வந்து உதவி செய்ய தேவன் கிருபை பாராட்டினார். மேலும் நமது தொடர்பிலிருக்கும் ராகேஷ் என்பவர் 16 மாணவர்களை விடுதி யிலிருந்து இந்நிகழ்ச்சிக்கு அனுப்பி வைத்ததற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள சுரஜ்புர் பகுதியைச் சேர்ந்த ஹிமான்சு தன்னுடைய நுரையீரல் புற்றுநோயிலிருந்து பரிபூரண சுகம்பெற; சிறுநீரகம் செயலிழந்து வாரம் இருமுறை இரத்த சுத்திகரிப்பு செய்து கொண்டிருக்கும் வாலிபப்பெண் நிக்கி ஊர்மிளாவுக்கு தேவன் அற்புத சுகமருள; புதிய தொடர்பாளர்களான ரஜனி, சந்தி வதி மற்றும் சாவித்ரி குடும்பங்கள் விசுவாசத்தில் பெலப்பட; நம்முடைய பயிற்சி வகுப்புக்கு வந்துகொண்டிருந்த 13 வயது ஜோதி உடலநலக் குறை வினால் மரித்துவிட்டாள். அவளது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

# 11
## பிப்ரவரி

செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பினயகுமார் குரு

## உத்தரப்பிரதேசம்

### பஸ்தி: ஸ்ரீனிவாசன் & ஷீபா ஜி

**துதிக்க:** தேவபர், பங்காட், படேபன் ஆகிய கிராமங்களில் சிறப்பான முறையில் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட்டது. விசுவாசிகளின் உதவியினால் ஆலயத்தின் மேற்கூரை அமைக்கப்பட்டது. விசுவாசிகள் மூலம் அநேகருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிவாரி கிராமத்தைச் சேர்ந்த ஒரே விசுவாசியான கபுரா என்ற விதவை சகோதரி கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் கிராமத்தினரின் எதிர்ப்பை சந்தித்து வருகிறார். இவரையும், இவரது ஐந்து பிள்ளைகளையும் தேவன் பாதுகாக்க; பகவன்தாஸ் நெஞ்சு வலியிலிருந்து சுகம்பெற; நடக்கவிருக்கும் விசுவாசிகளின் குடும்பக் கூடுகை, ஆத்தும ஆதாய பயிற்சிகள் யாவும் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

### காட்டாம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு விசுவாசிகள் மற்றும் காவல் துறையினரின் உதவியுடன் கிறிஸ்துமஸ் ஆராதனை காட்டாம்பூர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. அநேக வருட ஜெபத்திற்குப் பின் நமது சபை மூப்பர் சுனிதாவின் கணவர் குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். எவ்வித இடையூறுமின்றி எட்டு இடங்களில் கிறிஸ்துமஸ் மற்றும் புதுவருட ஆராதனை சிறப்பாக நடைபெற செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காட்டாம்பூர் ஆலயத்தில் ஞாயிறு ஆராதனை தொடர்ந்து தடையின்றி நடத்தப்பட; நமது விசுவாசிகளின் உறவினர்களும், புதிய தொடர்பாளர்களும் விசுவாசத்திற்குள் வழிநடத்தப்பட; ஊழிய வளர்ச்சிக்கு சாதகமாக காவல் துறை மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் கிடைக்க; எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசிகள் தைரியத்தோடு தேவனில் நிலைத்திருந்து சாட்சியாய் வாழ ஜெபிப்போம்.

### பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர், அஜித் பாண்டியன்

**துதிக்க:** ஒருவர் கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட்டு தேவனின் மந்தையில் இணைந்தார். ஒன்பது இடங்களில் கிறிஸ்துமஸ் ஆராதனைகளை தடையின்றி நடத்தவும், அதில் பார்வையாளர்களாக கலந்து கொண்ட மக்களுக்கு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியினை அறிவிக்கவும் தேவன் உதவி செய்தார். பிரிந்து வாழ்ந்து வந்த விருஞ் மோகனின் மகளும், மருமகனும் ஜெபத்தின் மூலம் சேர்ந்து வாழ தேவன் கிருபை செய்தார். உதிரப்போக்கினால் நீண்ட நாட்களாக அவதியுற்று வந்த துர்காதேவி ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பைசோலி கிராமத்தில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியை நடத்த முதலில் அனுமதி தந்த காவல்துறை பிறகு சிலரின் எதிர்ப்பினால் அதனை ரத்து செய்துவிட்டது. எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; மேஹனா கிராம ஆலய வழக்கு விரைவில் சாதகமாக முடிந்து ஆராதனை தொடங்கப்பட; ரமீலா கிராமத்தின் சப்பேரா சமூகத்திலிருந்து விபன் பாய் குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டதினால் அவரது சமூகத்தினர் அவரது வீட்டை அடித்து நொறுக்கியுள்ளனர். விபின் பாய் விசுவாசத்தில் உறுதியாய் நிற்கவும், எதிர்ப்போர் உள்ளத்தில் தேவன் கிரியை செய்யவும் ஜெபிப்போம்.

# 12 பிப்ரவரி

புதன் *உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரோஞ்ஜய் நர்சாரி

### ஜாலவ்ன்: கவித் ராகேஷ் ரத்திலால் & ஈகார் ரேஷ்மா மாருதி

**துதிக்க:** இருவர் கிறிஸ்துவில் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். கான்பூர் கிராமத்தில் சுமார் 400 பேர் கூடிவர கிறிஸ்துமஸ் கீத ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. மூன்று புதிய கிராமங்களில் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி யினை அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மங்க்ரோல் கிராமத்தில் புதிய ஆராதனை குழு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. ராம்பூரா துணை பணித்தளம் சிறப்பாக செயல்பட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த 15 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்துக்கொண்டிருக்கும் தினேஷ் மற்றும் நான்கு வருடங்களாக ஜெபித்து வரும் ஹெமலதாவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; மாற்றுத் திறனாளியான ஓசம் தன்னுடைய வாழ்வாதாரத்திற்கு தேவையானதை சம்பாதித்துக்கொள்ள தேவன் வழிவகை செய்திட; காது கேட்பதில் குறைபாடுள்ள பல்வீரின் மகள் சுகம்பெற; நற்செய்தி பகிரப்பட்டுள்ள புதிய கிராமங்களில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### கால்வா: ஐசக் & சீதா

**துதிக்க:** கொரோனா நோய் தொற்றுக்குப் பின் கொர்க்கு இன மக்களுக்காக முதன்முறையாக நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் மேளாவில் சுமார் 300 பேர் கலந்துகொண்டனர். கால்வா சபை ஆராதனையில் ஒவ்வொரு மாதமும் புதிதாக அநேகர் கலந்துகொள்கின்றனர். சிக்கன்குனியாவிலிருந்து ரத்தியாவுக்கு தேவன் சுகமளித்தார். பிரிந்து வாழ்ந்த அனில் & சங்கீதா தம்பதியினர் ஜெபத்தின் மூலம் இணைந்து வாழ தேவன் கிருபை செய்தார். அசுத்தாவியின் பிடியிலிருந்து மிஷ்ரி மிஜிக்கு விடுதலை தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மணி & சுகந்தி, ஆகாஷ் & அஞ்சு, ராஜாராம் & பம்மி, கோரேலால் & கீதா ஆகிய தம்பதியினருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; விசுவாசிகள் தங்கள் குடும்பத்திலுள்ள சிறுவர்கள் மற்றும் வாலிபர்களை கிறிஸ்தவ நெறிமுறைகளில் கண்டிப்புடன் வளர்க்க; ஜாம்தாத் மற்றும் ஹசன்புரா கிராமங்களில் விரைவில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

### பால்: வெங்கடேஷ் வடார் & ஷீபா

**துதிக்க:** விசுவாசிகள் இல்லாத மூன்று கிராமங்களில் கிறிஸ்துமஸ் கீத ஆராதனை எவ்வித தடையின்றி நடத்த தேவன் உதவி செய்தார். சமுலி, பசி மற்றும் பிபல்குரா சபைகளில் நடத்தப்பட்ட பெண்களுக்கான சிறப்பு கூடுகையில் திரளான பெண்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர் பெற்றனர். கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயுள்ள விசுவாசிகளுக்கு சோலாபூடி கிராமத்தில் நடத்தப்பட்ட விசேஷ கூடுகையில் சுமார் 40 பேர் கலந்துகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கீத பவனிகள் நடத்தப்பட்டு நற்செய்திப் பிரதிகள் விநியோகிக்கப்பட்டுள்ள 20 கிராமங்களில் தேவன் மகத்தான கிரியைகளை நடப்பிக்க; வீர்சிங் மரணத்தினால் கலங்கி நிற்கும் அவரது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; அம்பாபானி கிராமத்தில் விசுவாசிகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் ராய்சிங் பட்டேல் தேவனால் சந்திக்கப்பட; பூர்ணபட்டா கிராமத்தில் குடியிருக்க நிலமின்றி தவிக்கும் நமது விசுவாசிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

## 13
## பிப்ரவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்டெல்லா பிரபுதாஸ்
திரு. சஞ்சீப் குமார் ஆண்ட்ரப்
திருமதி. கம்புங் தாபா சுசாவ்
திருமதி. வயலட் ஹன்ஸ்தா

## அஸோம்

### கோகாமுக் & தகுவாகனா:

**டென்சிங் & கவிதா**

**துதிக்க:** அனைத்து விசுவாசிகளின் வயல்களிலும் தேவன் செழிப்பான அறுவடையைக் கட்டளையிட்டார். ஒருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். ஜோது பாங்குங் என்பவரது வயிற்று வலியை தேவன் குணப்படுத்தினார். விசுவாசிகளின் உதாரத்துவமான ஈகையினால் சுக்கியா சப்பாரி என்ற இடத்தில் மூங்கிலாலான ஆலயம் கட்டி முடித்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரக செயலிழப்பினால் பாதிக்கப்பட்டுள்ள ராகுல் சிந்தே, மலேரியா மற்றும் பல சரீரப் பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்டுள்ள சபை மூப்பரான தேவோகாண்டோ ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தடைசெய்யும் மோனிகா, பல்லவி ஆகியோரின் குடும்பத்தினர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; விசுவாசிகள் லுகிதா, பெகு, டேரா பெகு, அல்ஃபா பாயெங் ஆகியோர் ஆலய ஆராதனையில் தவறாமல் கலந்துகொண்டு விசுவாசத்தில் வளர; சிறு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள லிசா மிராக்ளினுக்கு தேவன் தொடர்ந்து நல்ல ஆரோக்கியத்தைத் தர ஜெபிப்போம்.

### லக்கிம்பூர்:

**ஆரோன்சிங் நர்சாரி & ரீனா**

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையில் இணைந்துள்ளனர். ஆறு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், ஐந்து கிராமங்களில் பின்தொடர் பணி செய்யவும் தேவன் கிருபை செய்தார். குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்ட அநேகர் ஜெபம் மற்றும் ஆலோசனைகளின் மூலம் தேவனால் விடுவிக்கப்பட்டனர். 39 பேருக்கு நேரிடையாக சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இளம் வாலிப பருவத்தில் போதைக்கு அடிமைப்பட்டுள்ள அலிசன் நாராவுக்கு தேவன் விடுதலை தர; நடைபெறவுள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய கூடுகை, சபை மூப்பர்களின் பயிற்சி ஆகியவை சிறப்பாக நடைபெற; தேவனை விட்டு பின்வாங்கியுள்ளோர் தேவனிடம் திரும்பவும், சபை மற்றும் ஊழிய காரியங்களில் ஈடுபடவும் ஜெபிப்போம்.

## பீஹார்

### ராணிகன்ஜ்:

**ஆனந்தன் எம். & நிஷா, தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி**

**துதிக்க:** 10 கிராமங்களில் நடைபெற்ற சுவிசேஷ ஊழியத்தின் மூலம் சுமார் 1700 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், 24 வேதாகமங்கள் மற்றும் 18 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கவும் தேவன் கிருபை செய்தார். புற்றுநோயின் தீவிரத்தினால் உயிர் பிழைப்பது கடினம் என்ற நிலையில் ஆலயத்திற்கு வந்து ஜெபித்த சுதாகருக்கு அற்புத சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்ட அனைவரும் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று விசுவாசித்து அறிக்கையிட; இப்பணித்தளத்தில் அநேக கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை தேவன் கட்டளையிட; மிஷனெரியின் தந்தைக்கு தேவன் நல்ல சரீர ஆரோக்கியத்தை தந்தருள ஜெபிப்போம்.

# 14 பிப்ரவரி

வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லால் நுன் மவி மார் கிப்கென்

## கிழக்கு கங்கை பிராந்தியம்:

### பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்

**துதிக்க:** ஜக்கர்கஞ்ச் கிராமத்தில் புதிதாக ஒரு ஆராதனை துவங்க தேவன் கிருபை செய்தார். இக்குளிர் காலத்தில் மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு தேவன் தந்து வரும் சுகத்திற்காக, பாதுகாப்பிற்காக, மிஷனெரி பவர்தினேஷ் குடும்பத்திற்கு தேவன் தந்துள்ள குழந்தை செல்வத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லால்பூர் கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி திலிப்சதாவிடமிருந்து நிலத்தை அபகரிக்க முயற்சி செய்வோர் மனந்திரும்ப; தீவிர எதிர்ப்பினை சந்தித்து வரும் ஹரிஹரா மற்றும் ராம்பூர் சபை விசுவாசிகள் கிறிஸ்துவை உறுதியாய் பற்றிக்கொள்ள; சுதேச ஊழியர்களான பிரகாஷ், ஜோகிந்தர், சஞ்சய், லால் பகதூர் ஆகியோர் தேவனின் கரத்தில் வல்லமையாய் பயன்படுத்தப்பட ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### அமரபாடா:

### வியாசு பாபு &சௌந்தர்ய ரேகா

**துதிக்க:** 13 கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் சுமார் 13,166 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 15 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். தோன்முனி சோரன், திஜான் ஹெம்ரோம், ராம்பாரா முர்மு ஆகியோரை வலிப்பு நோயிலிருந்தும், தேனா ஹன்ஸ்தா மற்றும் ஜுனாஸ் ஹெம்ரோமை பிற வியாதிகளிலிருந்தும் குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடும் குளிரிலிருந்து விசுவாசிகளையும், ஊழியர்களையும் தேவன் பாதுகாக்க; சுவிசேஷத்தைக் கேட்ட மக்கள் உள்ளங்களில் பரிசுத்தாவியானவர் கிரியைச் செய்ய; சபை மூப்பர்களான சாஹிப்ஜொத்தான் மராண்டி, ஜோனா முர்மு, ஜோஷ்வா ஹெம்ரோம் மற்றும் அனில் முர்மு வேத அறிவில் வேரூன்றி வளர; தும்பார்சிர் ஆலயக் கட்டுமானப்பணி விரைவில் முடிவடைய; பிட்டியா முர்மு, ருஷிலால் ஹெம்ரோம் ஆகியோரை பக்கவாதத்திலிருந்தும், தலாமே ஹெம்ரோமை வலிப்பிலிருந்தும், ஹெம்லால் சோரனை பித்தப்பை கல் பிரச்சனையிலிருந்தும், கலேசார் சோரனை காச நோயிலிருந்தும் தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

### ஐமா: முன்னா மொகந்தியர் & சுமித்தா தாஸ்

**துதிக்க:** 28 கிராமங்களில் சுமார் 3,200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். 26 பேர் தேவன் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். 22 இடங்களில் நடைபெற்ற திரைப்பட ஊழியத்தின் மூலம் சுமார் 1,500 பேர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொண்டனர். சபை மூப்பர் பயிற்சி, விசுவாசிகள் பயிற்சி, கமிட்டி அங்கத்தினர் கூடுகை அனைத்தும் சிறப்பாய் நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டுவோர் தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கை செய்ய; சபை மூப்பர்கள் சபை மக்களை ஆவிக்குரிய வாழ்வில் பொறுப்புடன் நடத்திச்செல்ல; ஊழியம் விரிவடைய சுதேச ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப் பண்ண; ரம்தான் சோரனை பக்கவாதத்திலிருந்தும், புடுல் ஹெம்ரோமை மன அழுத்தத்திலிருந்தும் தேவன் குணமாக்க ஜெபிப்போம்.

## 15
## பிப்ரவரி

சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேனியல் தாமஸ்
திருமதி. மெர்சி தெபோரா செந்தில்
திரு. வசாவா எலேஷ் பிரபு, திரு. அய்யனார் M.

### கங்குபாடா சிறுமியர் விடுதி:
**ஈவ்லின் பாக்கியா, எஸ்தர் சாவித்ரி**

**துதிக்க:** அரையாண்டு தேர்வை அனைத்து மாணவியர்களும் நல்ல முறையில் எழுத தேவன் கிருபை செய்தார். பிங்கி மற்றும் சஜினி விடுதிக்குத் திரும்ப தேவன் உதவி செய்தார். அநேக சிறுமியர்களின் இருதயங்களில் ஆவிக்குரிய மாற்றத்தை தேவன் தந்துள்ளார். சுகவீனத்தினால் பாதிக்கப்பட்டிருந்த, விடுதியில் பணி செய்யும் ஊழியர்களான கிரண், அனுஷ், ரூத் ஆகியோருக்கு தேவன் சுகமருளினார். விடுதியின் கட்டுமானப்பணிகளை ஆரம்பிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடியா, சுஜி ஆகியோர் விரைவில் விடுதிக்குத் திரும்ப; கட்டுமானப் பணிகளின் தேவைகள் பூரணமாய் சந்திக்கப்பட; சுதேச ஊழியரான விஜிலாவின் தந்தை கால் வீக்கத்திலிருந்து சுகம்பெற; 11 & 12-ம் வகுப்பு படிக்கும் மாணவியர்களுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தை அருளிச் செய்ய; வாலிபப் பிள்ளைகள் தங்களை பரிசுத்தமாய் காத்துக்கொள்ள; விடுதி மற்றும் கட்டடப் பணிக்கு தேவையான தண்ணீரை தேவன் அருளிச்செய்ய ஜெபிப்போம்.

### மண்ட்ரோ & பகையா மாணவர் விடுதி: **கென்னடி சிங் & ஹயோஜம் லின்தோய்பி, சுதாகரன் (ஓய்வு) & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** விடுதியில் மேற்கூரை சீரமைக்கும் பணி நல்லமுறையில் முடிவடைந்தது. தேவன் விசுவாசிகளின் வயல்களில் நல்ல அறுவடையைக் கட்டளையிட்டார். மிஷனெரி சுதாகர் அவர்களின் மகள் பெர்ஸி, திருமணமாகி 8 ஆண்டுகளுக்கு பிறகு கர்ப்பம் தரிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுதியில் படிக்கும் 104 மாணவர்களும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; படிப்பில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கும், 10ஆம் வகுப்பு தேர்வு எழுதவுள்ள சில்பானு முர்மு மற்றும் செல்பன்ஸ்டன் கிஸ்குவுக்கும் தேவன் விசேஷித்த ஞானத்தை அருள; பிலிப் மற்றும் ஆனந்த் ஆகிய விடுதி வார்டன் குடும்பத்தினர் நேர்மையுடன் தங்கள் பணிகளை நிறைவேற்ற; மாணவர்களை பள்ளிக்கு அழைத்துச் செல்ல தேவையான வாகனத்தை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

### தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை

*மஹாராஷ்டிரா மாநிலம், இகத்புரி பணித் தளத்திலுள்ள டாம்னி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி ரத்தன் என்பவரின் ஐந்து வயது மகன் பூஷன் கோலி பந்துகளுடன் (மார்பிள்ஸ்) விளையாடிக்கொண்டிருக்கும் போது தற்செயலாக ஒன்றை விழுங்கி விட்டான். முதலுதவி செய்தும் கோலியை அகற்ற முடியவில்லை. ரத்தனின் மனைவி லலிதா, மகனை மருத்துவமனைக்கு கொண்டுச் செல்லும் முன் முதலில் ஜெபிக்க தீர்மானித்தார். ஜெபத்திற்குப்பின் ஆச்சரியவிதமாய் தொண்டையிலிருந்த கோலி வயிற்றுக்குள் நகர்ந்தது. அன்று இரவு நன்றாக தூங்கினான் பூஷன். மறுநாள் காலையில் இயற்கையான முறையில் மலம் வழியாக கோலி வெளியே வந்தது. ரத்தன் குடும்பத்தினர் ஆலயத்தில் சாட்சி பகிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினர். அல்லேலூயா!*

# 16
## பிப்ரவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பொன்லதா ஜெபக்குமார்

திரு. சதீஷ் குமார் C.

# மேற்கு வங்காளம்

## பாலூர்ஹட்:

### ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின், ரஞ்சன், அஜித்

**துதிக்க:** போன்ஹாட், ஹரிபூர், மங்கல்பூர் ஆகிய கிராமங்களில் ஒவ்வொரு இல்லங்களையும் சந்தித்து சுவிசேஷ பிரதிகள் விநியோகித்து நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மங்கல்பூர் கிராமத்தில் இரண்டு குடும்பங்கள் தேவன் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். ஆறு கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் சுமார் 690 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோபால் மார்டி, மௌசாமி மார்டி, சோனாலி சோரன், மிலன் சோரன், சுதேச ஊழியரின் மனைவி சுஸ்மிதா ஆகியோரின் வியாதிகளை நீக்கி சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் குடும்பங்களில் சிறுவர்கள், வாலிபர்கள் கிறிஸ்துவ விசுவாசத்திலும், ஆவிக்குரிய முதிர்ச்சியிலும் வளர; அமாத்பூர் ஆராதனையை நடத்தி வரும் ஸ்வாபன் கிஸ்கு கர்த்தருக்குப் பயந்து வாழ; சுஷில் ஹன்ஸ்தக், சுஜய் ஹன்ஸ்தக், நிரஞ்சன் மார்டி, கோமோல் கிஸ்கு, எலியாஸ் டுடு, கொம்லேஷ் கிஸ்கு, ராகேஷ் கிஸ்கு ஆகியோர் தங்கள் நேரங்களை தேவனின் ஊழியத்தில் செலவழித்து சாட்சியாய் ஜீவிக்க; ஜோசப் முர்மு, ரமேஷ் சோரன், தபோன் மார்டி, சுனில் டுடு, சோனாலி முர்மு ஆகியோரின் குடும்பங்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் நடத்தப்பட ஜெபிப்போம்.

# சத்தீஸ்கார்

## ரகுநாத்பூர் விடுதி:

### லவ்லின் புன்யா & கிரண் பெங்ரா

**துதிக்க:** இப்பணித்தளத்தில் எவ்வித எதிர்ப்புமின்றி கிறிஸ்துமஸ் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. விடுதி பிள்ளைகள் நல்லமுறையில் தேர்வுகள் எழுத தேவன் கிருபை செய்தார். விடுதி ஊழியர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு நல்ல ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இக்கடும் குளிர் நாட்களில் தேவன் பிள்ளைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், படிப்பில் மந்தநிலையிலிருக்கும் பிள்ளைகளுக்கும், 12-ம் வகுப்பு தேர்வுக்கு ஆயத்தப்படும் நித்தின் மற்றும் எபநேசருக்கும் தேவன் விசேஷித்த ஞானத்தை அருளவும், சிறுவர் விடுதிக்கு அர்ப்பணமுள்ள சமையல்காரர் கிடைக்கவும், மிஷனெரி லவ்லின் புன்யாவுக்கு கால் வலியிலிருந்து தேவன் சுகம் தரவும் ஜெபிப்போம்.

## *மஞ்சள்காமாலை மறைந்துபோனது*

*மஹாராஷ்டிரா மாநிலம், எட்டப்பள்ளி பணித்தளத்தில் ஜீவன்கட்டா கிராமத்தில் ஆஷிஷ் குமோட்டி என்பவர் மஞ்சள்காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்தார். அவரது தந்தை அவரை அநேக பூஜாரிகளிடம் எடுத்துச் சென்றும் சுகம் கிடைக்காததால் மருத்துவமனைக்கு கொண்டுசென்றபோது மரிக்கும் நிலையிலிருந்த அவரை காப்பாற்ற முடியாது என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். விசுவாசிகள் அனைவரும் கூடி தேவன் அவரை காப்பாற்றும்படி ஊக்கத்தோடும், விசுவாசத்தோடும், ஒருமனதோடும் ஜெபித்தனர். இரக்கமுள்ள தேவன் அவருக்கு அற்புத சுகமருளினதால் அவர் ஆலயத்திற்கு வந்து தேவனை மகிமைப்படுத்தி வருகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

# 17 பிப்ரவரி

திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ருஹாமா குரு

திருமதி. வன்கலபுடி சாந்தினி கெனோஸ்

## ஒடிசா

### ராய்ரங்பூர்:

**குணா சந்திர பாய்க் & கிருட்டாஞ்சலி பாய்க்**

**துதிக்க:** 40 புதிய கிராமங்களில் சுமார் 4200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். 13 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். மூன்று குடும்பங்கள் தேவனை அறிவதில் வாஞ்சைக்காட்டி வருகின்றனர். அசுத்தாவியின் பிடியிலிருந்து சோம்பாரி ஹெம்ரோமுக்கு தேவன் விடுதலை அருளினார். சுக்ராம் மற்றும் ரிங்கு குடும்பத்தை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதித்தார். புதிய விசுவாசியான ராய்சன் சோரனின் அடக்க ஆராதனை எவ்வித இடையூறுமின்றி கிறிஸ்தவ முறைப்படி நடத்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் தேவனுக்கு சாட்சியாய் ஜீவிக்க; வாஞ்சையோடு ஆலய ஆராதனையில் கலந்து கொள்வோர் விரைவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய; நந்தினி மஹாலி–ஊனம், அமரேந்திரா, பகத்சிங்–பக்கவாதம், ரேபிகா–காசநோய், மாதுரி பண்ரா–படுத்தபடுக்கை, நந்தியா நாயக் & நாகி ஹெம்ரோம்–சிறுநீரகப் பிரச்சனை, லக்ஷ்மி நாயக்–தொழுநோய், சோனா முனி–கடுமையான தலைவலி இவர்களை தேவன் குணப்படுத்த; சங்ராம் சோரன், கைலாஷ், பிஜய் டுடு, புல்சந்த் நாயக் ஆகியோரின் குடும்பங்கள் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட; ஜெயராம் நாயக் மற்றும் சுங்கி குண்டன்கல் குடும்பங்களில் காணப்படும் பிரச்சனைகள் நீங்கி சமாதானம் பெற ஜெபிப்போம்.

### ஜிங்க்பானி:

**ஆபிரகாம் எஸ். & அலீஸ் ஷீபா**

**துதிக்க:** மூன்று புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், மூன்று கிராமங்களில் பின்தொடர் பணி செய்யவும் தேவன் உதவி செய்தார். 19 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். பராமௌடி சபையைச் சேர்ந்த கிர்பா டியோகாமுக்கு ஜெபத்தின் மூலம் சுரங்கத்தில் வேலை கிடைக்கச் செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொக்சோ, துய்பானா, சோனபோசி, சாய்பாஷா ஆகிய கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் அமைத்திட எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; ஜெய்பூர் மற்றும் புக்ரிபி கிராமங்களில் நடைபெறவுள்ள வாலிபர் பயிற்சி மற்றும் சபை மூப்பர் பயிற்சி பயனுள்ளதாய் அமைய; பார்வதி புர்த்தி இரத்த வாந்தியிலிருந்தும், சலோனி கண் பிரச்சனையிலிருந்தும், சுசந்த் பண்ரா பக்கவாதத்திலிருந்தும் சுகம்பெற; சபை மூப்பர் சிரம்பாரிக்கு சுரங்கத்தில் வேலை கிடைக்க; மாபுரு கிராமத்தில் நமது விசுவாசிகளை பயமுறுத்துவோர் மனந்திரும்பி தேவனை விசுவாசிக்க ஜெபிப்போம்.

# 18 பிப்ரவரி

செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தேஜஸ்விட்டா பெபர்த்தா
திரு. சுகின்லால் C.

## கியோஞ்சர்:

### பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா

**துதிக்க:** 10 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபையில் இணைந்துள்ளனர். ஏழு புதிய கிராமங்களில் சுமார் 345 பேர் இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறியும் வாய்ப்பைப் பெற்றனர். கீதா பிங்குவா பின்மாற்றத்திலிருந்து மீண்டும் விசுவாசத்திற்குள் வந்தள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மது மற்றும் குருபாரி முண்டாவின் குடும்பப் பிரச்சனையை தேவன் நீக்கி சமாதானம் அருள; பிசாசின் பிடியினால் அவதிப்படும் குலு முண்டாவை தேவன் விடுவிக்க: விசுவாசி சந்திரா முண்டாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கிராமத்தினர் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## ஜாம்போனி:

### இப்ராயிம் மாலி & புரோசன்சிதா

**துதிக்க:** நமது விசுவாசிகளின் முயற்சியினால் மூன்று புதிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துமஸ் தினத்தை ஒட்டி சுமார் 2000 கைப்பிரதிகள் விநியோகிக்க தேவன் உதவி செய்தார். கசியாபேடா, லடுகாபாசா, புல்பஹாரா, பெலியா, பஹாராகோரா, சாகிலியா, தாராகாம் ஆகிய கிராமங்களில் பின்தொடர்பணி செய்திட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திலிப் முண்டா நமது ஊழியத்தில் உற்சாகத்துடன் உதவி செய்ய; பிபுட்டி, புசம்முர்மு குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஜகன்நாத்பூர் மற்றும் எட்கோடா பகுதிகளில் நடைபெறவிருக்கும் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## தேன்கனல்:

### அசோக் நாயக் & சுரபி நாயக்

**துதிக்க:** ஆத்தும பாரம் பெற்ற விசுவாசிகளின் மூலம் எட்டு புதிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப் பட்டு சுமார் 180 பேருக்கு சுவிசேஷம் அறிவித்திடவும், 100 கைப்பிரதிகள் மற்றும் 40 புதிய ஏற்பாடுகளை விநியோகம் செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார். ஜின்கிரிபேடா, கொட்டாபோசி, பத்தர்காடா ஆகிய கிராமத்தினர் இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ள வாஞ்சைக்காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நிரா ஹெம்ரோம் மனந் திரும்பி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; கடும் குளிர் காலத்தில் விசுவாசிகளுக்கும், ஊழியர்களுக்கும் தேவன் நல்ல ஆரோக்கியத்தை அருளிச்செய்ய; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் மூன்று கிராமத்தினரும் விரைவில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; பித்தம்பார், கக்ரி, சுருகக்ரி, நாத் ஹெம்ரோம், டங்குரு ஹெம்ரோம் ஆகியோர் தேவனுடைய விசுவாசத்தில் நிலைத்து நிற்க ஜெபிப்போம்.

## 19 பிப்ரவரி

புதன் *உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அன்புமலர் பாலமுருகன்

### ஜஷிப்பூர்: கணேஷ் & சுமதி

**துதிக்க:** எட்டு புதிய கிராமங்களை சுவிசேஷத்தினால் சந்திக்க தேவன் கிருபை செய்தார். 94 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். 16 கிராமங்களில் பின்தொடர்பணி செய்ய தேவன் உதவி செய்தார். திரைப்பட ஊழியம் ஒரு கிராமத்தில் செய்யப்பட்டது. பிராந்திய அளவிலான திட்டக்கூடகை மற்றும் செயற்குழு கூட்டம் நல்ல முறையில் நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராதா நகர், ஹடிபோகா, ஓரியா, பாகர்சுனி, ஜமுதி, தல்பும்கார் விடுதி, பலிசாய், பாராஜம்டா ஆகிய இடங்களில் நடைபெறும் ஆலய கட்டிடப்பணி நல்லமுறையில் முடிவடைய; இப்பணித்தளத்திற்கு தேவன் அர்ப்பணமுள்ள ஊழியரைத் தந்தருள; புடிகாவ்ன் எதிரப்புகளை சந்தித்து வரும் விசுவாசிகளை தேவன் பலப்படுத்த; அரசாங்கத் தேர்வு எழுத ஆயத்தமாயிருக்கும் சாக்டி விடுதியைச் சேர்ந்த எட்டு சிறுவர்களுக்கு தேவன் ஞானத்தை அருளிச்செய்ய; டிப்பாலி கை வலியிலிருந்து சுகம்பெற ஜெபிப்போம்.

### ரிமுலி:

### அரவிந்த் குமார் & ஹெலன் மரியம்

**துதிக்க:** குளிர் காலங்களில் ஆஸ்துமா வியாதியினால் அவதிப்படும் அர்சலா கிராமத்தைச் சேர்ந்த ஸிரிகா முண்டாவுக்கு ஜெபத்தின் மூலம் இந்த குளிர்காலத்தில் ஆஸ்துமா வராதபடி தேவன் பாதுகாத்தார். மூன்று நாட்களாக கண்பார்வை இழந்து தவித்த மக்கிமுண்டா ஜெபத்தின் மூலம் கண்பார்வை பெற்றார். படுபில் கிராமத்தைச் சேர்ந்த குருவாரி என்பவர் ஒரு குறிப்பிட்ட தெருவில் நடக்கும் போது பயத்தின் ஆவியினால் மயக்கம் அடைவதுண்டு. ஊக்கமான ஜெபத்தைக் கேட்ட தேவன் இந்நாட்களில் அந்த பிரச்சனையிலிருந்து விடுதலை அளித்துள்ளார். இரண்டு இடங்களில் எவ்வித எதிர்ப்புமின்றி கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நாளுக்கு நாள் கண்பார்வையை இழந்து வரும் சாந்தி போனிக்கு தேவன் தெளிவான கண் பார்வையை அருள; கீதா முண்டாவின் வயிற்று வீக்கத்தை தேவன் பூரணமாய் குணப்படுத்த; இவ்வருட இலக்கினை அடைய ஊழியர்கள் எடுக்கும் முயற்சியினை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

### தல்பும்கார்: பிரமோத்குமார் வகேரா & ஜசோதா பேன்

**துதிக்க:** தாய்சாய் கிராமத்தில் நடைபெற்ற சபை மூப்பர் பயிற்சியில் அனைத்து சபை மூப்பர்களும் கலந்து கொண்டு பயன்பெற தேவன் கிருபை செய்தார். இரண்டு மாதமாக வறட்டு இருமல் மற்றும் இரவில் காய்ச்சல் இவைகளினால் அவதியுற்று வந்த பௌடியா கிராமத்தைச் சேர்ந்த பாலாய் சோரனுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகமருளினார். மூன்று இடங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் தேவனின் நாமம் மகிமைப்பட்டது. மகி முர்மு, ஜாமாதார் ஹெம்ரோம், ஹர்சி ஹெம்ரோம், ராம்தாஸ் கிஸ்கு ஆகியோரின் வியாதிகளை குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கால் வலியினால் நடக்க முடியாமலிருக்கும் குல்டிஹா கிராமத்தைச் சேர்ந்த துளாரி ஹெம்ரோமுக்கும், விஷக் காய்ச்சலினால் அவதியுறும் லக்கன் டுடுவுக்கும் தேவன் சுகமருள; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் விரைவில் தந்தருள; இக்கடும் குளிர் காலத்தில் தேவன் ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் நல்ல ஆரோக்கியத்தை தந்தருள ஜெபிப்போம்.

# 20 பிப்ரவரி

வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. குண சந்திர பயக்

திரு. ஜாண்சன் V.

திருமதி. பசாந்தி மராண்டி ஹெபல்

## குஜராத்

### கவாண்ட்:

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுமார் 170 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஐந்து குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ராமதாஸ்பாயின் மகன் தூக்கத்தில் மூச்சுத் திணறி மரிக்கும் தருவாயில் ஜெபத்தின் மூலம் உயிர் பெற்றான். மஹுதபாரி கிராமத்தில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளை நடத்த ஆட்சியாளரின் அனுமதி கிடைக்க தேவன் உதவி செய்தார். 10 ஆண்டுகளாக வயிற்று வலியினால் அவதிப்பட்ட செவ்லிபெனுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகம் தந்தார். மஹுதபாரி மற்றும் கட்டமாடி கிராமங்களில் ஆலயம் கட்ட அரசாங்க அனுமதி கிடைக்க செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆறு வருடங்களாக கண் மற்றும் உடல் வலியினால் அவதிப்படும் முகேஷ்க்கும், ஒரு வருடமாக நெஞ்சு வலியினால் அவதிப்படும் சானுபெனுக்கும் தேவன் பூரண சுகமருள; தொடர்ந்து கிறிஸ்தவர்களுக்கு இடையூறு விளைவித்து வரும் நாடுபாய் மற்றும் ஈஸ்வர்பாய் தேவனால் தொடப்பட ஜெபிப்போம்.

### கொர்காம் விடுதி:

**ஜி. குமரன் & ஜெலின் ஜெயா**

**துதிக்க:** 15 கிராமங்களில் சுமார் 250 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 24 பேர் இயேசு கிறிஸ்தவுக்குள் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். இரண்டு இடங்களில் நடைபெற்ற வாலிபர் கூட்டங்களில் அநேகர் பங்குபெற்றனர். பாம்பு கடியிலிருந்து மணிலால், சுக்ரியா, ஊர்மிளா, கோபி ஆகியோரை தேவன் பாதுகாத்தார். ரமிளாவுக்கு ஏற்பட்ட மாரடைப்பில் அற்புத சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அனுபென் நெஞ்சு வலியிலிருந்தும், சுசிலாபென் உதிரப்போக்கிலிருந்தும், ஹன்ஸாபென் உடல் வலியிலிருந்தும், ஹெட்டால்பென் மற்றும் ரேஷ்மிபென் பிற சுகவீனங்களிலிருந்தும் பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

### அஹ்வா & பிப்பள்வாடா:

**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.**

**துதிக்க:** 22 கிராமங்களில் நடைபெற்ற ஊழியத்தின் மூலம் சுமார் 100 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பன்னமால், சின்சினகோவ்டா, தக்லிபாடா ஆகிய கிராமங்களில் உபவாச ஜெபம் ஏறெடுக்க தேவன் கிருபை செய்தார். விஷப்பாம்பிடமிருந்து சுனிலை தேவன் பாதுகாத்தார். எவ்வித தடையுமின்றி டுங்கார்டா ஆலய பிரதிஷ்டை சிறப்பாக நடைபெற்றது. சிக்கன்குனியாவிலிருந்து சாவித்ரிக்கு தேவன் சுகமருளினார். அனைத்து ஆராதனைக் குழுக்களிலும் கிறிஸ்துமஸ் பண்டிகை சிறப்பாக கொண்டாட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர்கள் பயிற்சியில் கலந்துகொள்ளும் ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட; கெர்பாடா ஆலயக் கட்டுமானப் பணி விரைவில் முடிக்கப்பட; கிராமத்தினரின் எதிர்ப்பினிமித்தம் தேவர்பாடாவில் ஆலயம் கட்ட நிலம் நன்கொடையாக கொடுத்த நமது சபை மூப்பரின் சகோதரர்கள் தற்போது இடையூறு விளைவித்து வருகிறார்கள். இவர்களுடன் தேவன் இடைபட ஜெபிப்போம்.

# 21
## பிப்ரவரி

வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. திலக் S.

### கப்ராடா:

**பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா**

**துதிக்க:** நான்கு இடங்களில் நடைபெற்ற பொது கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் சுமார் 20,000 பேர் கலந்துகொண்டனர். சுமார் 5000 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 99 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏழு முறை கருச்சிதைவு ஏற்பட்டு தேவனை விசுவாசத்தோடு தேடிய கஸ்தூனியா கிராமத்தின் அஜித்பாயின் மனைவிக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். ஜம்போனா கிராமத்தின் மந்திரவாதியான பஹூதூர்பாய் மனந்திரும்பி இயேசுவை சொந்த இரட்சராக ஏற்றுக்கொண்டார். காணாமல் போன 7 வயது சிறுமி த்ரிஷ்டி ஜெபத்தின் மூலம் பத்திரமாய் வீடு வந்த சேர கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்பு நிமித்தம் தடைப் பட்டிருக்கும் பத்தர்டி ஆலயக் கட்டுமானப் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட; கார்மல், கோட்வால், மலுங்கி மற்றும் கேற்பாடா ஆலயக் கட்டுமான பணிகள் விரைவில் நிறைவடைய; அமித்யா கிராமத்தில் ஆலயம் கட்ட அனுமதி கிடைக்க; ஊழியத்தை தடை செய்ய முற்படும் எதிர்ப்பாளர்கள் இயேசுவின் அன்பினால் தொடப்பட ஜெபிப்போம்.

### நிஜர் & செலம்பா:

**யுவனேஷ் & ஜான்சி ராணி**

**துதிக்க:** புதிய கிராமம் ஒன்றில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். சுமார் 178 பேர் முதன்முறையாக இயேசு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டனர். 10 வேதாகமங்களும், 10 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டன. நரம்பு வலியிலிருந்து பதுபாயை தேவன் குணப்படுத்தினார். நமது விசுவாசிகளின் நிலங்களில் தேவன் செழிப்பான அறுவடையைக் கட்டளையிட்டார். ஜமுனாபென் குடும்பத்திற்கு குழந்தை பாக்கியம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வசாவா விசுவாசிகள் கிறிஸ்துவில் உறுதியாய் நிலைத்திருந்து தங்கள் சமுதாயத்தினருக்கு சாட்சியாய் வாழ; மனநோயிலிருந்து ரன்வீர் பாய்க்கு தேவன் பூரண சுகமருளினார். ஐந்து வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்கு காத்திருக்கும் அர்ப்பணா பென் மற்றும் பிரியாங்கா பென் குடும்பத்திற்கு தேவன் இரக்கம்பாராட்ட; சுவார்தா பெனுக்கு தேவன் ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தந்தருள ஜெபிப்போம்.

### மோட்டாபண்டா:

**மர்குஸ் மால்தோ & சாரா**

**துதிக்க:** ஒன்பது சபை விசுவாசிகளின் வீடுகளை சந்தித்து நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் கீத பவனியில் வாலிபர்கள் மற்றும் சபை மக்கள் உற்சாகத்துடன் பங்கு பெற்றனர். அனைத்து கிராமங்களை ஒருங்கிணைத்து நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அகிலேஷ்பாய் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஜெகதீஷ் பரிபூரண சுகம்பெற; கடந்த ஒரு வருடமாக தீராத வயிற்று வலியினால் கஷ்டப்பட்டு வரும் தீனாபெனுக்கு தேவன் அற்புத சுகம் தர; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் சொந்த குடும்பத்தினரால் வெளியே தள்ளப்பட்டுள்ள நகீன்பாய் வசிக்க ஏற்ற வீடு கிடைக்கவும், அவரது குடும்பத்தினர் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## 22 பிப்ரவரி

சனி

## தாத்ரா & நகர் ஹவேலி

### சில்வாசா:

**டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்**

**துதிக்க:** அந்தர்பாடா கிராமத்தைச் சேர்ந்த வந்தனா பென் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். ஜீர்வல் கிராமத்தைச் சேர்ந்த பத்துபென் விஷ பாம்பின் கடியிலிருந்து அற்புதமாய் பாதுகாக்கப்பட்டார். ஒரு மாதமாக நடக்க இயலாமலிருந்த வஸ்தி பென் ஜெபத் திற்குப் பின் நடக்கும்படி தேவன் கிருபை செய்தார். அம்பாரி கிராமத்தைச் சேர்ந்த சாய்னா பென் மற்றும் வரோலிக்கு அரசாங்கத்தில் வேலை கிடைக்க தேவன் கிருபை செய்தார். ஜீவன்பாய்க்கு மன அழுத்தத்திலிருந்து சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புகையிலைக்கு அடிமைப் பட்டுள்ள விசுவாசிகளை தேவன் அத்தீயப்பழக்கத்திலிருந்து விடுதலை செய்ய; ஆலயத்திற்கு வர தயங்கும் சுனில் மற்றும் ஷில்பா மனந்திரும்பி ஆலய ஆராதனையில் பங்குபெற; ஜோஷ்னா பென், பிசுபாய், ராஸ்மில்லா ஆகியோர் மன அழுத்தத்திலிருந்து விடுதலைபெற; சந்திரிகா, ரேணுகா, ஜெயந்தி, பார்வதி, ஜோஷ்னா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; மூன்று வருடங்களாக நடக்க இயலாமலிருக்கும் விசுவாசி திலிப்பாய்க்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### சுர்கானா:

**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** சசர்லா, ஆலர்திடாம், மேலுஸ்கே ஆகிய மூன்று கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். சுமார் 1868 பேர் சுவிசேஷத்தை கேட்கவும், 106 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடவும் தேவன் கிருபை பாராட்டினார். கண்டோல்சா கிராமத்தில் ஐந்து மாதங்களுக்கு முன்பாக துவங்கப்பட்ட ஆராதனைக்குழுவில் தற்போது ஐந்து குடும்பங்கள் விசுவாசத் திற்குள் வந்துள்ளனர். தொண்டலாபாடா கிராமத்தில் லசாபாய் குடும்பம் பின் மாற்றத்திலிருந்து தேவனிடம் திரும்பி யுள்ளனர். குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுதலை அருளியதால் பப்லோன் கிராமத்தில் ஒரு குடும்பம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்பின் நிமித்தம் தடை செய்யப்பட்டுள்ள பர்த்தார்டி கிராமத்தின் ஆலயக் கட்டுமானப் பணி விரைவில் துவங்கப்பட; நடைபெறவுள்ள பெண்கள் கூடுகை, ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றை தேவன் ஆசீர்வதித்திட; குக்குட்னே கிராமத்தில் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ளோர் மனந்திரும்ப; அம்ஜார் கிராமத்தில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை கட்டளையிட; பிம்பள்வாடி கிராமத்தில் வசிக்கும் மீராபாயை தேவன் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை செய்ய ஜெபிப்போம்.

# 23 பிப்ரவரி

ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஐசக் ராஜா D.
திரு. செந்தில் குமார் தீமோத்தேயு
திருமதி. அனிதா பிரபா ஆனந்தகுமார்
திருமதி. ஈமண்டி அனுராதா பங்காரு

## இகத்புரி:

**நாகராஜன் & திலகவதி**

**துதிக்க:** கோட்கர் மற்றும் கோனாய் கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். எட்டு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கரகாவ், அவேலி, பரேலி, தலகாவ், பைனாவ் கிராமங்களில் பின்தொடர் பணி செய்யப்பட்டது. தலைகாவ் கிராமத்தைச் சேர்ந்த அமிதா, தன் நிலத்தில் முழங்கால் படியிட்டு ஜெபித்ததினால் தேவன் நல்ல விளைச்சலைக் கட்டளையிட்டார். ஜெபத்தின் மூலம் ஷில்பாவுக்கு காது வலியிலிருந்து தேவன் சுகமருளினார். காணாமல் போன சித்ராவின் தங்க சங்கிலி ஊக்கமான ஜெபத்திற்குபின் கிடைக்கும்படி தேவன் உதவி செய்தார். அசுத்தாவியின் பிடியிலிருந்து தேஜெலுக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மன அழுத்தத்தினால் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள தலாகாவ் கிராமத்தைச் சேர்ந்த பாலு, காலு மற்றும் முக்கனேவாடி கிராமத்தைச் சேர்ந்த யோஜெஸ்ட் ஆகியோரை தேவன் விடுதலையாக்க; சஞ்சய், நிவ்ருத்தி, கிருஷ்ணா, ராஜாராம் ஆகியோர் தங்கள் பின்மாற்றத்திலிருந்து மனந்திரும்பி தேவனை பூரணமாய் விசுவாசிக்க; சிக்கில் செல் வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள ரோஹித்தை தேவன் குணப்படுத்த; அவேலி கிராமத்தைச் சேர்ந்த கலுமுகனே என்பவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் வீடு கட்டுவதற்கான அரசாங்க உதவி தொகை பெறுவதற்கான பெயர் பட்டியலில் அவரது பெயர் நீக்கப்பட்டுள்ளது. தேவன் அவருக்கு உதவி செய்ய; தாமினி கிராமத்தில் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் ஐந்து குடும்பங்கள் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

## மாஷாவட் & தலோடா விடுதி:

**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** ஆவ்கா மற்றும் படால்டா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், மூன்று பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடவும் தேவன் கிருபை செய்தார். சுவாசப் பிரச்சனையிலிருந்து மோக தங்கர், உடல் வலியிலிருந்து லக்ஷ்மி ராகுநாத், வயிற்று கட்டியிலிருந்து ஷாம்சி பாய் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; மருத்துவ வசதியில்லாத மலைப்பாங்கான பகுதியில் வசிக்கும் வில்லி பாய்க்கு சுகப்பிரசவம் அருளினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள மோங்காவுக்கு நல்ல கண்பார்வை கிடைக்க; விபத்தில் சிக்கி நடக்கமுடியாமல் கஷ்டப்படும் அருணுக்கு தேவன் பூரண சுகமருள; திருமணமாகி 8 ஆண்டுகளாக குழந்தையின்றி தவிக்கும் செவந்தா குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; 10 வயது சோனாலி கல்லீரல் நோயிலிருந்து சுகம்பெற; சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள ஆவ்கா, படால்டா ஆகிய கிராம மக்கள் உள்ளத்தில் தேவன் கிரியை செய்ய ஜெபிப்போம்.

# 24 பிப்ரவரி

திங்கள்

## போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** கிறிஸ்துமஸ் நாட்களில் சுமார் 1100 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 22 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். கேவாஷியபாடா, சமர்தேவ், நிம்பாரி, ஜமன்பானி, தேகாவாடே, தாராடே ஆகிய கிராமங்களில் பின்தொடர்பணியின் மூலம் 200 பேருக்கு நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். டபசியா மற்றும் சங்வி கிராமத்தில் நடைபெற்ற சத்சங் கூட்டத்தில் சுமார் 250 பேர் கலந்துகொண்டனர். உமரத், சமரியா கிராமங்களில் நடத்தப்பட்ட சிறுவர் முகாமில் 32 பேர் பங்குபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரத்த புற்றுநோயிலிருந்து யோகேஷ் என்ற சிறுவனை தேவன் குணப்படுத்த; சுர்மால் மற்றும் குவர்சிங்-ஐ குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுவிக்க; மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சுமிக்கு தேவன் விடுதலைதர; திட்டமிடப்பட்டுள்ள ஊழியங்கள் எவ்வித தடையுமின்றி நடைபெற்று மிகுந்த பலனைத் தர; புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோர் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவும், ஆவிக்குரிய முதிர்ச்சியைப் பெறவும் ஜெபிப்போம்.

## தலாசரி: கெடாம் ஸ்ரீனிவாசராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** 10 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் எவ்வித தடையுமின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். 22 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கை செய்துள்ளனர். மட்கோன் கிராம ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக்கிராமத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் சுமார் 2200 பேர் கலந்துகொள்ள கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் தேவனுக்கு உகந்த சாட்சிகளாய் ஜீவிக்க; மனார் மற்றும் சில்லார் பகுதியில் நடக்கவிருக்கும் சுவிசேஷ ஊழியத்தின் மூலம் நல்ல பலனை தேவன் கட்டளையிட; சபை மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கான வேதாகமப் பயிற்சியின் மூலம் அவர்கள் வேத வசனங்களை ஆழமாய் கற்றுக்கொள்ளவும், அதன்படி வாழவும்; திட்டமிட்டுள்ள வார்லி மொழி புதிய ஏற்பாட்டின் பிரதிஷ்டைக்காக; தத்து ஹர்பலேயின் மனநோயை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

# கர்நாடகா

## ஷிக்காவ்: நரேந்திரா குமார்

**துதிக்க:** ஆறு வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருந்த லக்ஷ்மி & தேவராஜ் தம்பதியினருக்கு, கர்ப்பம் தரிக்க வாய்ப்பேயில்லை என்று மருத்துவர்கள் கூறியபோதிலும் அவர்களின் விசுவாசமுள்ள ஜெபத்தைக் கேட்ட தேவன் குழந்தை பாக்கியம் அருளி ஆசீர்வதித்துள்ளார். பவித்ரா மற்றும் அனுஷாவுக்கு அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை கிடைத்தது. சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து ஊழியருக்கு தேவன் அருளின சுகத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துமஸ் காலங்களில் நற்செய்தியைக் கேட்ட அனைவரும் தேவனை விசுவாசிக்க; எதிர்ப்பினிமித்தம் கிறிஸ்துவை விட்டு பின்வாங்கியோர் மீண்டும் கிறிஸ்துவண்டை திரும்ப; இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்போர் தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கை செய்ய; கிறிஸ்தவர்களுக்கான கல்லறைத் தோட்ட நிலம் பெற்றுக்கொள்ள எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், உள்ளூர் அரசு அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைக்கவும் ஜெபிப்போம்.

# 25 பிப்ரவரி

செவ்வாய்

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஏஞ்சல் ஜெபா ஹென்றி
திருமதி. சுப்ரா பாக் மிண்டு குட்டும்
திருமதி. சாரதி அருண்குமார்
திருமதி. சுமதி கணேஷ்
திருமதி. நீத்து தினேஷ் குமார்
திரு. ஸ்டீபன் ஹன்ஸ்தா

## முண்ட்காட்:

### கோன்கா கிரி பாபு & லூர்து மேரி

**துதிக்க:** மூன்று புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் மூலம் சுமார் 500 பேர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொண்டனர். சாப்பி கிராமத்தில் ஒருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். துமிரிகி, சுப்பி, புதர்சிகி, அலிகட்டிகி, இந்திராநகர், கரிகேரா, கவாலிகொப்பா, கணேஷ்புரா ஆகிய கிராமங்களில் வசிக்கும் கிறிஸ்தவர்களின் வீடுகளில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் மூலம் அநேகருக்கு சுவிசேஷம் சென்றடைய தேவன் கிருபை செய்தார். இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்த ஹாஜிம்மா நமது ஜெபக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருமணமாகி 15 ஆண்டுகளாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் நாகப்பா குடும்பத்திற்கு தேவன் புத்திரசந்தானம் அருள; முண்ட்கோட் கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலத்தை தேவன் தந்தருள; பூஜா, சந்திரகலா, ரூபா, ருக்மினி, ஹஞ்சமா, மஞ்சுநாத் தேசாய் & நாகப்பா ஆகியோர் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; கருச்சிதைவு ஏற்பட்டதினால் மன அழுத்தத்திலுள்ள கிருபாவுக்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள ஜெபிப்போம்.

## நிட்குண்டி:

### மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் சுமார் 400 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக இரண்டு ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். குறைப்பிரசவத்தில் பிறந்த கௌசல்யாவின் பச்சிளம் குழந்தை ஜெபத்தின் மூலம் எடை அதிகரிக்கவும், நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி சாந்தா பாயிடம் ரூ.30,000/-த்தை கடனாக பெற்ற உமேஷ் அதை விரைவில் திருப்பித்தர; கர்ப்பப்பை புற்று நோயினால் அவதியுறும் ரேஷ்மாவுக்கு தேவன் அற்புத சுகமருள; குறைந்த இரத்த அழுத்தத்தினால் கஷ்டப்படும் சாந்தா பாய் குணமடைய; இப்பகுதியில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

## கடுகளவு விசுவாசம்

*மஹாராஷ்டிரா மாநிலம், சுர்கானா பணித்தளத்திலுள்ள பல்சேத் கிராமத்தைச் சேர்ந்த ரோஹினி மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு பெண். இவரது குடும்பத்தினர் இவரை பல மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று வைத்தியம் செய்தும், பல பூஜைகள் மற்றும் சடங்காச்சாரங்கள் செய்தும் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் தவித்தனர். இந்நிலையில் அவரது கிராமத்து விசுவாசிகள், தங்களது வாழ்வில் தேவன் செய்த நன்மைகளை சாட்சியாக அவருக்குக் கூறி சுவிசேஷத்தை அறிவித்தனர். அதனை விசுவாசித்த ரோஹினி ஆலயம் வந்து ஜெபிக்க ஆரம்பித்தார். மூன்று வாரங்களில் தேவன் அவருக்கு பரிபூரண சுகமருளினார். தேவன் தந்த அற்புத சுகத்தின் மூலம் அவரது குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டதோடு தேவனுக்கு மகிமையாக சாட்சி பகிர்ந்து வருகின்றனர். அல்லேலூயா!*

# 26 பிப்ரவரி

புதன் *உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுரேஷ் ஜோசப்

### முண்டர்கி:

**சாமுவேல் பெபர்தா**

**துதிக்க:** சுமார் 362 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஹட்ஹள்ளி தாலுக்காவில் இரண்டு கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டன. முண்டர்கியைச் சேர்ந்த துர்கேஷ் என்ற விசுவாச வாலிபனை உயிர்க்கொல்லி நோயிலிருந்து தேவன் பாதுகாத்தார். பெல்லாரி மாவட்டத்தில் வசிக்கும் பஞ்சாரா இன மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். இப்பணித்தளத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் சில காவல் துறையினர் உட்பட சுமார் 475 பேர் கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெல்லாரி மாவட்டத்திலுள்ள 57 கிராமங்களும் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட; குழந்தை திருமணம் மற்றும் கல்வி அறியாமையினால் பாதிக்கப்பட்டுள்ள குஞ்சிகேரி சமூக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட; தங்கள் விசுவாசத்தினிமித்தம் கிராமத்தினரால் துன்பங்களை சந்தித்து வரும் துர்கம்மா, ரங்கம்மா ஆகியோருக்கு தேவன் தைரியமும், பெலனும் அருளி தொடர்ந்து தேவனுக்கு உத்தம சாட்சியாய் வாழ உதவி செய்ய; தங்கால், மார்த்தாம்மா, மேரியம்மா, இர்ரம்மா, லக்ஷ்மம்மா, சுங்காலத்தம்மா, ஜெயம்மா, மயிலம்மா, தேவியம்மா, பிரேம லதாம்மா ஆகியோர் கடன் பிரச்சனைகளிலிருந்து விடுபடவும், கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிக்கொள்ளவும் ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### ரோத்தம்:

**தேபதத்தா லிமா & சோனியா ராணி**

**துதிக்க:** நான்கு கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியங்களின் மூலம் சுமார் 200 பேர் நற்செய்தியைக் கேட்டனர். சானிபள்ளி கிராமத்தில் ஒருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையில் இணைந்தார். சேருகுரு மற்றும் ரோத்தம் கிராமத்தில் திரைப்பட ஊழியம் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொண்டனர். நீண்ட இடைவெளிக்கு பிறகு துர்க்கலா பட்டணம் கிராமத்தில் மீண்டும் ஆராதனை துவங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதோடு ஆலய சொத்துக்களை சேதப்படுத்திய இராஜு தேவனின் அன்பினால் தொடப்பட; சரீரத்திலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ள இராஜம்மாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள; ரோத்தம் கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற இடத்தை தேவன் அருளவும், இப்பகுதியில் ஊழியம் செய்ய ஆத்தும பாரமுள்ள ஊழியரை தேவன் எழுப்பித்தரவும் ஜெபிப்போம்.

## 27
## பிப்ரவரி

வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நியாங் கான் மன் உம் பியாக் லால்
திருமதி. அனிதா ஷிஷுபால்
திருமதி. ங்கைஜல்ஹிங் கிப்ஜென் சீஹ்கோதாங்

### நல்லமாடா:
### தினேஷ் மறையா & மேரி முர்மு

**துதிக்க:** கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளின் மூலம் 980 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டு, கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. நல்ல மாடாவில் நடைபெற்ற பெண்களுக்கான சிறப்புக் கூடுகையில் அநேக பெண்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர். புதன் கிழமை உபவாச ஜெபம் சபைகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நல்லமாடாவில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் மற்றும் கிராமத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்க; கடந்த ஐந்து வருடங்களாக பிசாசின் பிடியில் துன்புறும் மரியம்மா பரிபூரண விடுதலை பெற; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு சபைக்கு வரும் மக்கள், சமூக அழுத்தத்திலிருந்து விடுபட்டு கிறிஸ்துவை வெளியரங்கமாய் அறிக்கையிட ஜெபிப்போம்.

### கொத்தச்செருவு: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** நீண்ட நாட்களாக பிசாசின் ஆதிக்கத்திலிருந்த ஓபுலம்மா என்கிற சகோதரி ஜெபத்திற்கு அழைத்துவரப்பட்டு, தேவனால் விடுதலை பெற்றதினால் அவரது குடும்பம் முழுவதும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து வருகின்றனர். ஒருவர் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட்டுள்ளார். பெண்கள் கூடுகையில் 15 பேர் கலந்து கொண்டு தேவ அசீர்வாதம் பெற்றனர். கிறிஸ்துமஸ் கால நிகழ்ச்சிகள் அனைத்தும் எவ்வித இடையூறுமின்றி சிறப்பாய் நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கீழே விழுந்து இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள கங்கனா விரைவில் சுகமடைய; நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சுவிசேஷத்திற்கான எதிர்ப்புகள் மறையவும், எதிர்ப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும்; தன்னுடைய நிலத்தை பிறர் அபகரித்துவிட்டதால் ஆலயத்திற்கு வந்து ஜெபித்து வரும் கேசவம்மா இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றுக் கொள்ளவும், அபகரிக்கப்பட்ட நிலம் திரும்ப அவருக்கு கிடைக்கவும் ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### மேச்சேரி:
### தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி

**துதிக்க:** 20 குடும்பங்களை சந்தித்து கிறிஸ்து பிறப்பின் செய்தியை பகிர்ந்து கொள்ள கர்த்தர் கிருபை செய்தார். கண்ணய்யன், ஜெயலக்ஷ்மி ஆகியோருக்கு பெலவீனத்திலிருந்து தேவன் சுகமருளினார். ரஞ்சித்தின் கடுமையான வயிற்று வலியை குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கம்மாவின் நுரையீரல் பிரச்சனையை தேவன் குணப்படுத்த; ஸ்ரீனிவாசன் & பிரியா குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளிச்செய்ய; மூர்த்தி, கோபி, செல்வராஜ் ஆகியோரை குடியின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுவிக்க; இப்புதிய வருடத்தில் அநேக ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட; சின்ராஜ், துரைசாமி, லக்ஷ்மி, தங்கம்மா ஆகியோரின் குடும்பத்தினர் தேவனை முழுமனதுடன் விசுவாசிக்க ஜெபிப்போம்.

# 28
## பிப்ரவரி

வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வினு P., திரு. சாமுவேல் J.
திருமதி. ஜரின் லெட்தென்மாங் ஹாவ்கிப்

### பாவ்ரி வேதாகம மொழிபெயர்ப்புப்பணி:
**ஜேன் அமுத கிருபை**

**துதிக்க:** சங்கீதம் மற்றும் எஸ்தர் புத்தகத்தை சரிபார்க்கும் பணி முடிவடைந்தது. யாத்திராகமம் புத்தகத்தின் 10 அதிகாரங்களும், நீதிமொழிகளில் 10 அதிகாரங்களும் மொழிப்பெயர்க்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிறு பள்ளி மற்றும் விடுமுறை வேதாகமப் பள்ளி பாடத் திட்டங்களை பாவ்ரி மொழியில் தயாரிக்க தேவன் ஞானத்தை அருள; யாத்திராகமம் மற்றும் நீதிமொழிகளின் புத்தகத்தின் மொழிப் பெயர்ப்பு விரைவில் முடிவடைய; பாவ்ரி விசுவாசிகள் ஒவ்வொருவரும் புதிய ஏற்பாட்டை தினமும் வாசித்து, கீழ்படிந்து, தேவனுக்கு பயந்து ஜீவிக்க; மொழிப்பெயர்ப்பில் உதவி செய்பவர்களின் குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்க; ஆடியோ பைபிள் விரைவில் வெளியிடப்படவும், வேத வசனத்தைக் கேட்போர் கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ளவும்; மிஷனெரியின் இடது கை வலி மற்றும் நீர் கட்டி குணமாகவும், இரண்டாவது மகள் நளதமின் உயர்கல்விக்காகவும் ஜெபிப்போம்.

### *இயேசுவின் சீடராய் மாறிய மந்திரவாதி*

*ஒடிசா மாநிலம், ஜஷிப்பூர் பணித்தளத்தைச் சேர்ந்த புடிகாவுன் கிராமத்தில் பேய் ஓட்டுவதிலும், பலி செலுத்தி வியாதிகளை நீக்குவதிலும் சக்திவாய்ந்த மந்திரவாதியான கண்டாய் ஹைபுரு என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் இனம்புரியாத வியாதியினால் பாதிக்கப்பட்டு பல முயற்சிகள் செய்தும் தன்னைத்தான் குணமாக்கிக்கொள்ள முடியவில்லை. உடல் நிலை மோசமான போது கிறிஸ்தவர்களின் உதவியை நாடும்படி இவருக்கு அறிவுரை கூறப்பட்டது. அவ்வாறே செய்ய சியாலினாய் கிராமத்து விசுவாசிகள் இவருக்காக ஊக்கமாக ஜெபித்தனர். தேவனை விசுவாசத்தோடு தேடிய இவருக்கு ஒரே வாரத்தில் தேவன் பூரண சுகத்தை அருளினார். எனவே இவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதோடு தன் கிராமத்தினருக்கும் சுவிசேஷம் அறிவித்து வந்தார். கிராமத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததோடு இவரை அடித்து துன்புறுத்தினர். இவரது வீட்டிற்குச் செல்லும் குடிநீர் இணைப்பை துண்டித்தனர். இவரை கொலை செய்யும் நோக்கத்தோடு சாக்குப்பையில் கட்டி நதியில் வீசினர். இச்சூழ்நிலையில் சியாலினாய் சபையினர் இவரது குடும்பத்தினருக்கு பாதுகாப்பு கொடுத்து வந்தனர். பலமுறை துன்பங்களை சகித்துவந்த இவர் ஒருமுறை காவல் துறையினரின் உதவியினை நாடினார். ஆனால் காவல் துறையினர் அவருக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. எனவே ஜெபத்துடன் மாவட்ட துணை ஆட்சியரின் உதவியை நாடியபோது அவர் தலையிட்டு இப்பிரச்சனைக்கு முடிவை ஏற்படுத்தினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

401 மிஷனரி ஆல்பம்



# திரு. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & திருமதி. டெல்பின்

மிஷனெரி திரு. ரா. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் அவர்கள், தமிழ்நாட்டின் சென்னை பட்டணத்தைச் சேர்ந்த மறைந்த திரு. ராஜேந்திரன் & திருமதி. மேரி பாக்கியம் என்ற தம்பதியினருக்கு மூத்த மகனாக 01.05.1987 அன்று பிறந்தார். இவருக்கு 2 சகோதரிகள் உள்ளனர். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த இவர் குழந்தைப் பருவத்திலிருந்தே தேவ பக்தியில் வளர்க்கப்பட்டார். அதுமட்டுமல்லாமல் ஊழிய பாரத்தை சிறுவயதிலிருந்தே பெற்றோர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். பள்ளியில்படித்துக்கொண்டிருக்கும் போதே சபை ஊழியங்களிலும், சிறுவர் மத்தியில் தன்னார்வ ஊழியம் செய்வதிலும் வாஞ்சைகாட்டிவந்தார். 12-ம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் போது தனது சபையில் (NLAG) நடைபெற்ற மாலை ஆராதனையில் ஜம்மு காஷ்மீரில் ஊழியம் செய்யும் மிஷனெரியின் சாட்சியைக் கேட்டு அழிந்து போகின்ற ஆத்துமாக்களுக்காக தன் வாலிப பருவத்தை அர்ப்பணித்தார். பின்பு வேதாகம கல்லூரியில் B.Th. படித்துக்கொண்டிருக்கும்போது ஏசாயா 61:1,2 வசனங்கள் மூலம் ஊழிய அழைப்பைப் பெற்று தேவ சித்தம் செய்ய மீண்டும் தன்னை அர்ப்பணித்தார். 14.06.2007 அன்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழுநேர ஊழியராக இணைந்து உத்திரப்பிரதேசத்திலுள்ள நமது ஊழியர் பயிற்சி மையத்தில் ஒருவருட பயிற்சி பெற்றார். பின்னர் 2008-2014 வரை ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள ஹிரன்பூர், கொட்டல்புகுர் பணித்தளங்களில் ஊழியம் செய்தார்.

மிஷனெரி சகோதரி டெல்பின் தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பெரியநாயகம் & திருமதி. ரோஸ்லின் மேரி தம்பதியினருக்கு மூத்த மகளாக 19.03.1990 அன்று பிறந்தார். இவருக்கு 3 சகோதரிகள் உள்ளனர். 2012-ல் FMPB-யின் மூன்றுநாள் உபவாச கூடுகையில் கலந்துகொண்ட இவர் 'அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்' மத். 9:37 என்ற வசனத்தை முன்னிட்ட சவாலான செய்தியைக் கேட்டு தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்தார். 2014-ல் FMPB இல் முழுநேர மிஷனெரியாக இணைந்து ஊழிய பயிற்சி பெற்றப்பின் 01.06.2015 அன்று திரு. கிங்ஸ்லியை தேவ சித்தத்தின்படி திருமணம் செய்தார். 2015-2022 வரை மேற்கு வங்காளத்தில் வசிக்கும் சந்தால் இன மக்கள் மத்தியில் பட்டிராம், மலாட்டிபூர் மற்றும் தபான் பணித்தளங்களில் குடும்பமாக பணிசெய்த இவர்கள் தற்போது குமார்கஞ்ச் மற்றும் பாலூர்ஹட் பணித்தளங்களில் ஊழியம் செய்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு ஒரு மகனையும், ஒரு மகளையும் தந்து ஆசீர்வதித்துள்ளார். மகன் கவின் ராய் (22.06.2016) 4-ம் வகுப்பும், மகள் கேஷிகா (19.03.2018) 2-ம் வகுப்பும் டோனாவூர் பள்ளியில் படித்து வருகின்றனர். இம்மிஷனெரி குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.

Regd. Newspaper for India No.17759/69




***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***